திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

[illegible] : 8 21-1-55 வெள்ளி : விலை 3 அணா மலர் : 24

எனது பணிவன்பான நன்றி

●

திராவிடர் திருநாளை (பொங்கல் விழா) முன்னிட்டு வாழ்த்துச் செய்தி அனுப்பி மகிழ்வித்த அனைவருக்கும் எனது பணிவன்பான நன்றியறிதலையும் வணக்கத்தையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிடர் திருநாளன்று நாம் கண்ட இன்பம், என்றும் நிலைத்திருக்க நாம் ஆவன செய்வோம்;

வாழ்க திராவிடம்!

அன்புள்ள

என். வி. நடராசன்

தாயகம் திரும்பிய

தன்மான இயக்கத் தலைவர்



வீழ்ந்த மாவீரன்

தில்லை மறைமுதல்வன்

"மந்தகாசமான மாலை வேளை. மெதுவாக வீசிய காற்று உடலைத் தழுவி இதயத்துக்கு இன்பமளித்தது! சலசலவென சத்தமிட்டோடியது அந்தச் சிற்றாறு! எண்ணற்ற சுழல்களோடு வளைந்துவளைந்து ஓடிய அந்த ஆற்றில் துள்ளிய மீன்கள் மீது அடிவானத்தை நோக்கி சரிந்துகொண்டிருந்த கதிரவனின் ஒளிபட்டுப் பிரகாசித்தது! கரையிலுள்ள மரங்கள் வளைந்து நதியை முத்தமிட்டுக்கொண்டிருந்தன! வானத்தில் பறவைக் கூட்டங்கள் சிறகடித்துப் பறந்தன! ...காதலன் காதலியை கட்டித் தழுவி முத்தமிட்டதும் வெட்கத்தினால் அவள் முகம் சிவப்பதைப்போல சிவந்திருந்தது மேற்றிசை வானம்!......"

மேலே எழுத்து ஓடவில்லை. என்ன எழுதுவதென்றே புரியவில்லை. ஆம்; உள்ளமும் உடலும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க மறந்தன! சோர்வு உடலைக் கட்டித் தழுவியது. ஆனால் உள்ளமோ— குமுறலும், கொந்தளிப்புமாக இருந்தது.

பேனாவை வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்தேன். என்னுடைய முயற்சியையும் மீறி கண் இமைகள் இரண்டும் இணைந்தன! என்னுடைய மனம் எண்ணச் சிறகடித்து எல்லையில்லா வானவெளியில் பறந்தது, இன்ப கீதம் பாடி......

"எந்தக் கோட்டையைப் பிடிக்க திட்டம் போடுகிறாய்?"—அவசரமோ, படபடப்போ இல்லாது நிதானமாக, ஆனால் தெளிவாக ஒலித்தது இந்தக் குரல்!

நிமிர்ந்து பார்த்தேன்! என் கண்கள் ஆச்சரியத்தால் அகலவிரிந்தன! பள்ளியிலே படித்தபோது பார்த்திருக்கிறேன் மராட்டிய மாவீரன் சிவாஜியின் உருவத்தை படத்தில்! அந்த உருவமும், எதிரில் நின்ற உருவமும்...பரந்த நெற்றி; வீரக் கனல் வீசும் கண்கள்; அழகிய மீசை; கம்பீரமான தோற்றம்;—ஆம்; சிவாஜிதான்! அப்படித்தான் நினைத்தேன். என்னுடைய சந்தேகம் கேள்வி உருவிலே கிளம்பியது.

"யார் நீ? சிவாஜி போல..............."—நான் முடிக்கவில்லை.

"ஆம்; சிவாஜிதான்!",

நான் நினைத்தது சரிதான், என் உள்ளம் களிப்புக் கடலில் மிதந்தது!

"சிவாஜியா! புழுதியில் புரண்டு கிடந்த மராட்டியத்தை ஒளிவீசச் செய்த வீரன் சிவாஜியா! மராட்டியர்குல மாணிக்கம் சிவாஜியா! சென்ற இடமெல்லாம் வெற்றிக் கொடி நாட்டி கீர்த்தி பாடிய அஞ்சா நெஞ்சன் சிவாஜியா! மாற்றரசர்களை அலறடித்த அடலேறு சிவாஜியா!—வியப்பும், களிப்பும் என் உள்ளத்தை ஆக்கியதால் என்னையறியாமலே இந்த வார்த்தைகள் உருண்டோடி வந்தன!

"ஆம்; சிவாஜிதான்! நீர் இப்போது வர்ணித்தீரே அதே சிவாஜிதான்! ஆனால், அதோடு கூட பார்ப்பனீய பலிபீடத்தில் சிக்கிச் சிதைந்த சிவாஜி!"

"என்ன? பார்ப்பனீய பலி பீடத்திலா" புரியவில்லையே."

"புரியாதுதான்; உமக்கு மட்டுமல்ல, பலருக்கும் புரியாது! என்னுடைய வாழ்வு சரித்திரமிக்கவாழ்வு ஆனால் சோகமான முடிவு!"

"குழப்பம் அதிகமாகிறதே தவிர, தீரவில்லையே! விளக்கமாகக் கூறினால்........"

"கூறுகிறேன்! மராட்டியம்! மராட்டியம்!—ஓடி விளையாடவேண்டிய பருவத்திலேயே, பள்ளிசென்று படிக்கவேண்டிய காலத்திலேயே, என் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்த ஒரே சொல் இதுதான்! மண்ணிலே கிடக்கும் மராட்டியம், மாநிலம் மெச்சும்படி திகழவேண்டும்—இந்த லட்சியத்தை நோக்கித்தான் நான் ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்தேன்! என் வாழ்வின் குறிக்கோளே இதுவாகத்தான் இருந்தது. கடைசியில் வெற்றி பெற்றேன். ஆனால் அதற்காக நான் எடுத்துக்கொண்ட முயற்சி! பட்ட தொல்லைகள்! அனுபவித்த கஷ்ட நஷ்டங்கள்! ஆனால் இந்தத் தொல்லைகள் என் ஆர்வத்தீயில் பொசுங்கிப் போயின. என்னுடைய ஆர்வத்தினால் மட்டுமல்ல, ஆயிரமாயிரம் மராட்டியர்களின் உழைப்பால், வீரத்தால், அவர்கள் சிந்திய இரத்தத்தால் மராட்டியம் ஒளி வீசியது! மராட்டியத்தை துச்சமென மதித்து, கேலி பேசிய அயல்நாடுகள் அலறி வீழ்ந்தன மராட்டியத்தின் எழுச்சி கண்டு! மராட்டியர்களை மண்ணில் நெளியும் புழுவைப் பார்ப்பதைப் போல பார்த்த மாற்றார்கள் மருட்சி கொண்டனர் மராட்டியத்தின் மறுமலர்ச்சி கண்டு! ஆனால் நான் பூரித்தேன். ஆனந்தமடைந்தேன். நான் மட்டுமல்ல ஒவ்வொரு மராட்டியனும் செருக்கு கொண்டான். தன்னுடைய நாடு தரணியில் தார் வேந்தர் மெச்சும்படி விளங்குகிறதென்றால் இருக்காதா அவனுக்கு பூரிப்பு? தான் பிறந்த பொன்னாடு புவியிலே புகழொளி வீசி பொலிவுடன் விளங்குகிறதென்றால் இருக்காதா அவனுக்கு மகிழ்ச்சி?"

இதைக் கூறும்போது சிவாஜியின் குரலில் ஒரு மாறுதல் ஏற்பட்டது! கண்களில் புதிய ஒளி வீசியது! பலதரப்பட்ட உணர்ச்சிகளும் முகத்தில் பிரதிபலித்தன!

"நான் கொண்ட மகிழ்ச்சி, நான் அடைந்த பூரிப்பு—இவற்றிற்கு அளவேயில்லை! ஆனால் கொஞ்ச காலத்திற்கு பின் இவை என்னை விட்டோடிப் போகும் என்று நான் கருதவேயில்லை! ஆம்; நான் மராட்டிய மன்னனாக முடிசூட்டிக் கொள்ளப் போகும் போது 'கூடாது' என்றொரு குரல் கிளம்பியது! நான் திடுக்கிட்டேன்! என்னுடைய உள்ளம் நடுங்கியது—பயத்தினாலல்ல, வியப்பினால்! சொன்னது வாள் பிடிக்கும் வீரனல்ல! புல்லேந்தும் கோழை! களம்பல கண்டவனல்ல! வீரத்தை விலைகேட்கும் விருதா! சொன்னது ஒரு மராட்டியனுமல்ல! ஒரு வேதமோதி! ஆம்; மராட்டியத்திலிருந்த பார்ப்பனர்கள் அத்தனைபேரும் கூக்குரலிட்டார்கள். ஏன் தெரியுமா? நான் கீழ் சாதிக்காரனாம்! ஆகவே முடிசூட்டிக் கொள்ள உரிமையில்லையாம்! உயர்ந்த சாதிக்காரர் மட்டும்தான் முடிசூட்டிக் கொள்ளலாமாம்! இப்படி விசித்திரமான விளக்கந்தந்தார்கள், நான் முடிசூட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்கு! 'சிவாஜி! உனக்கு ஆற்றல் கிடையாது! ஆகவே நீ அரசாளக் கூடாது' என்று கூறியிருந்தால் நான் வேதனைப்பட மாட்டேன்! 'சிவாஜி! மக்களாதரவு உனக்கில்லை, ஆகவே மகுடாபிஷேகம் செய்து கொள்ளும் உரிமையும் உனக்கில்லை' என்று கூறியிருந்தால் ஆத்திரப்படமாட்டேன்! 'சிவாஜி! உனக்கு நாடு உண்டா? படை உண்டா? அமைச்சர் உண்டா? ஆகவே உனக்கு முடிசூட்டிக் கொள்ள உரிமைதான் உண்டா?' என்று கூறியிருந்தால்கூட நான் பொருட்படுத்த மாட்டேன்! ஆனால் அவர்கள் கூறியது இதுவல்ல! 'க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்த ஒருவன்தான் முறைப்படி மன்னனாக முடிசூட்டிக் கொள்ள முடியும். சூத்திர ஜாதியில் பிறந்த சிவாஜிக்கு அந்த உரிமை கிடையாது.' என்று நெஞ்சத்தில் கொஞ்சமும் பதட்டமின்றி கூறினார்கள். அவர்கள் கூறிய ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தை வாள் கொண்டறுத்தது! நான் உருவாக்கிய நாடு! நான் கட்டிய கோட்டை கொத்தளங்கள் நான் அமைத்த அரண்கள்! நான் தேடித் திரட்டிய பொருள்! ஆலோசனை கூற திறமைமிக்க அமைச்சர்கள் ஏராளம்! நாடு காக்க வீரர்களுக்கு குறைவில்லை! பின் ஏன் முடிசூட்டிக் கொள்ளக் கூடாது? அந்த முப்புரிதாரிகள் தடுத்தால் என்ன? அவர்களுக்கென்ன உரிமையிருக்கிறது என்னைத் தடுக்க? காடு திருத்தி நாடு நகரம் அமைத்த நான் நாடாளக் கூடாது என்று கூற என்ன உரிமையிருக்கிறது? நான் ஏன் அந்தப் புல்லர்களின் பேச்சை புறக்கணித்துத் தள்ளிவிட்டு முடிசூடக் கூடாது?—இப்படித்தான் முதலில் நினைத்தேன். ஆனால்..."

"ஆனலென்ன? களத்திலே பாய்ந்து வந்த எதிரிப் படைகளை சிதற அடித்து சிங்கமென திகழ்ந்த நீர் அந்த நரிக்குணம் படைத்த கூட்டத்திடமா பயந்தீர்! வீரத்தின் அடையாளம்—ஆற்றலின் சின்னம்—அஞ்சாமையின் உருவம்—மராட்டியத்தின் ஜீவன்—எனத் திகழ்ந்த நீர் குடிகெடுக்கும் துரோகிகளான அந்த பார்ப்பன கூட்டத்திடமா அடிபணிந்தீர்!"

என்னையுமறியாமலே வார்த்தைகளைக் கொட்டிவிட்டேன்! சிவாஜியின் பேச்சு என்னை உணர்ச்சியிலாழ்த்தியது. மராட்டியத்தின் மணிவிளக்கை மண்மேடென நினைத்த அந்த கோழைக் கூட்டத்தின் தைரியத்தை நினைத்தபொழுது...!

"ஆம்; உண்மைதான். நான் அவர்களுக்கு அடிபணிந்தேன்! மண்டியிட்டேன்! ஆனால் ஆழ்ந்த யோசனைக்குப் பிறகுதான் இந்த செயலைச் செய்தேன். ஏன் தெரியுமா? வஞ்சகத்தின் முன் வீரம் நிற்காது—இந்த வாக்கியம் என் உள்ளத்திலிருந்து குரல் கொடுத்த காரணத்தால்தான்..."

"என்ன? பீஜபூர் சுல்தானையும், டில்லி பாதுஷாவையும் நடுங்க வைத்த உமது வீரம் அந்த சிறு கூட்டத்தினரின் வஞ்சகத்தை வீழ்த்த முடியாதா?"

"நிச்சயமாக முடியாது! பல நாட்களுக்குப் பிறகுதான் இந்த உண்மை எனக்குப் புலப்பட்டது. ஆரியக் கூட்டமிருக்கிறதே அது பார்ப்பதற்கு சாதுவாகத்தானிருக்கும்! ஆனால் மிகவும் பயங்கரமானது! அதன் வஞ்சகம் ஒரு கவர்ச்சிகரமான மாயவலை. அதில் சிக்கியவர் மீளமுடியாது! அந்த பயங்கர சிலந்தி விரித்த வலையில் எண்ணற்ற மராட்டியர்கள் வீழ்ந்து கிடந்தார்கள். கண்களை அகல விரித்து அறிவுக்கு வேலை கொடுத்து நாட்டின் நாலா பக்கங்களையும் கூர்ந்து நோக்கியபோதுதான் இது எனக்கும் புலப்பட்டது; அவர்கள் ஒருவர் இருவரல்ல, எண்ணமுடியாத அளவுக்கு இந்த நாட்டிலே புகுந்துவிட்டார்கள். இந்த நாட்டு மக்கள் வாழ்க்கையிலே—கலை, மொழி, தொழில் ஆகிய அத்தனை துறைகளிலும் புகுந்திருந்தார்கள். அவர்களை அழிக்க நான் எடுத்துக்கொள்ளும் முயற்சி என்னை நானே மாய்த்துக்கொள்ளும் முயற்சிதான். இதை நான் நன்றாக உணர்ந்தேன். நான் மட்டும் அவர்கள் சொல்லை மறுத்து

11-ம் பக்கம் பார்க்க

காசாங்கில் பெரியார் முழக்கம்

சுதந்திர திராவிடத்தில் வரவேற்று வாழ்வளிப்போம் அதுவரை நீங்கள் தாயகத்திற்கு திரும்ப வேண்டாம்

உங்களுக்கு ஓரளவு வாழ்வளித்துவரும் நாட்டினருடன் ஒத்துழையுங்கள்

மலேயா காசாங்கில் 26-12-54 அன்று பெரியார் அவர்கள் மாபெருங் கூட்டம் ஒன்றில் சொற்பொழிவாற்றினார். ஏராளமான மக்கள் குறிப்பாக திராவிடர்கள் திரண்டிருந்து பெரியாரை வரவேற்றனர். இச்சிறப்புக் கூட்டத்திற்கு தோழர் தமிழ்ச்சாமி தலைமை வகித்தார் பல கழகங்கள் தனிப்பட்டவர்கள் மாலை அணிவித்தனர். வாழ்த்திதழ் அளித்தனர். பிறகு பெரியார் அவர்கள் பேசியதாவது;-

●

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! தோழர்களே! இன்று இங்கு எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நான் உங்களிடம் பெறுகிறபோது என்னை புதுமனிதனாக்குகின்றது. நான் என்றுமில்லா உணர்ச்சி பெறுகிறேன். முன்பு ஒருமுறை மலேயா வந்தபோது நான் உங்களை சந்திக்க முடியாமற் போய் விட்டது. இன்று அந்த நிலை ஏற்படுமோ, உங்களை சந்திக்க முடியாமற் போய்விடுமோஎன்று சந்தேகப்பட்டேன். நல்ல காரியமாக அந்த நிலை ஏற்படவில்லை. கோலாலம்பூரிலிருந்து தோழர்கள் எனக்குப் பேச அனுமதி காஜாங்கில் கிடைத்திருப்பதாயும் சொன்னார்கள். மகிழ்ச்சி யடைந்தேன்.

அன்று நான் மலாயாவுக்கு பிரயாணம் செய்தது 1930-ம் ஆண்டு ஆகும். இன்று 1954 முடியப் போகும் நேரத்தில் உங்களைச் சந்திக்கிறேன்.

நான் காங்கிரசில் பணியாற்றியிருக்கிறேன். நான் காங்கிரசிலிருந்து விலகியது அதில் மக்களுக்கு பயன் ஒன்றும் இல்லையென்பதுதான். பிறகு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தேன். அன்று என்னையும் என் தோழர்களையும் நாத்திகர்கள், கடவுளை நிந்திப்பவர்கள் என்று நிந்தித்தவர்களில் ஒரு சிலராவது உண்மையை உணர்ந்து வருகின்றனர். நமது இயக்கம் இன்று திராவிடர் இயக்கம் என்ற பேரால் வளர்ந்து வெற்றி பெற்றும் வருகிறது.

பல அறிஞர்கள், வெள்ளைக்கார ஆராய்ச்சியாளர்கள், சரித வாயிலாக அறிவித்ததை அடிப்படையாக வைத்தே திராவிட நாட்டுப் பிரிவினை கேட்கிறோம். பல எதிர்ப்புக்கிடையே விளக்கங்கள் தந்து வருகிறோம். எதிர்ப்பு இருக்க வேண்டியதுதான். அந்த எதிர்ப்புக்கிடையேயும் பல ஆயிரம் தோழர்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றனர் நம் இயக்கத்தில். அதுமட்டுமா, இன்று உங்கள் ஆதரவும் இருக்கிற தென்றால் நாம் செய்த தொண்டு வீணாகி விடவில்லை என்பதை உணர்கிறேன்.

நான் எதற்காக பாடுபடுகிறேன், என்னை நான் உயர்த்திக் கொள்ளவா, இல்லவே யில்லை. நம் நாட்டில் பறையன், பஞ்சமன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், பிச்சைக்காரன், நான், பிரம்மாவின் முகத்தில் பிறந்தவன் அதனால்தான் உயர்ந்தவன், நீ சூத்திரனுக்கு பிறந்தவன் அதனால் தாழ்ந்தவன் என்று கூறுகின்றனர், அதற்காக மனு தர்ம சாத்திரங்கள் இருக்குஎன்று கூறுகின்றனர் பார்ப்பனர், அதை நான் நீ எப்படியப்பா உயர்ந்தவன்? அதை கொஞ்சம் விளங்க சொல்லப்பா என்றால் நாத்திகன் உளறுகிறான் என்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஒன்று கூறுகிறேன். தாழ்த்தப் பட்டவன் ஒருவன் கடவுளைக் காணவேண்டித் தவம் செய்தானாம். அவன் செய்த முதல் தவம் முனிபுங்கவர்களை சுட்டரித்ததாம். பிரம வம்சத்திற்கு அழிவு நிலை ஏற்பட்டதாம். உடனே தேவனிடம் சென்று சூத்திரனாகிய ஒருவன் தவம் செய்வதினால் இந்த அக்கிரமம் என்று கூப்பாடு போடவே, ஆ! அப்படியா இதோ அவன் தலையைத் தரையில் உருளச் செய்கிறேன் என்றுகூறி அதன்படியே துண்டிக்கப் பட்டதாம்! பார்த்தீர்களா? எப்படி தாழ்த்தி யிருக்கான், சூத்திரன் தவம் செய்யக் கூடாதாம். இந்த அக்கிரமங்களையெல்லாம் எங்கள் கழகத்தவர்களை தவிர வேறுயார் கேட்கின்றனர்? இப்படி ஒரு சமுதாயத்தை தாழ்த்தியும், பேசியும் எழுதியும் வைத்திருக்கிறாயே என்று நாங்கள் கேட்டால் வாய்க்கு வந்தபடியெல்லாம் வசைபாடுகின்றனர் நம் நாட்டுக்கு பிழைக்கவந்த கூட்டத்தினர், அவர்கள் தான் அப்படியென்றால், நம்மவர்களுக்கு புத்தி இருக்கவேண்டாமா?

நான் கடவுள் இல்லை என்று சொல்லவில்லை. தமிழனுக்கு தனி பெருங் கடவுள் உண்டு. பொய் பொறாமை நீங்கிய கடவுள். அறமே உருவான கடவுள். அவர் எங்கும் நிறைந்திருக்கிறார், அதன் வழி நடந்தால் போதும். இதற்கு எடுத்துக்காட்டாக நம் சேர சோழ பாண்டியர் செதுக்கி வைத்த கல்வெட்டுகளை பார்த்தால் போதுமே. இடைக்காலத்திலே புகுந்து நாலாயிரம் சாதிகளை வகுத்து அதிலே இம்மாதிரியான சிக்கல்களை ஏற்படுத்தி அதை நம்பும்படி செய்தது இந்த ஆரிய பார்ப்பனர்கள். இதை நீங்கள் நம்ப வேண்டாம். பகுத்தறிவை துணைக் கழைத்து சிந்தித்துப் பாருங்கள் ஆரியம் செய்த சதி விளங்கும்.

தோழர்களே நம் தாயகத்தில் எத்தனை பிச்சைகாரர்கள் வந்து பணக்காரர்களாய்ப் போகிறான். இப்போது நம் நாட்டிலே டாட்டா, பிர்லா, டால்மியா பணத்தைச் சுரண்டி போகிறார்களே—நம் தாயகம் சுதந்திரமுடன் இருந்தால், எத்தனை கோடி வெள்ளி மீதமாகும்? 'டில்லிக்கு கொடுக்கும் பணத்தை வைத்துக் கொண்டு இலங்கையிலேயிருந்துவரும் தமிழனுக்கும் சிங்கப்பூர் மலாயா தோழனுக்கும் வாழ்வளித்து மீதம் இருப்பதை நம்மை அடிமை படுத்தும் டில்லிக்கே நாம் கடன் கொடுக்கலாமே!

இதெல்லாம் நாங்கள் எடுத்துக் கேட்கப் போனால் 'மதத்துரோகி' என்ற வசைபுராணம் பாடுகின்றனர் ஆதிக்கக்காரர்கள்.

இந்து மதத்திலே உள்ள பூசல்களையும் அதிலே உலாவும் வல்லூறுகளையும் களைத்தெரிய பாடுபட்ட காந்தியடிகளை மதபக்தன் என்று கூறப்பட்ட இந்து பார்ப்பான்தானே சுட்டுக் கொன்றான். இதிலிருந்தே மதபக்தியின் லட்சணம் தெரியவில்லையா!

இன்று நமது தாயகத்தில்நடப்பது நமது சொந்த ஆட்சி முறையல்ல. ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குப் பதிலாக வடநாட்டு ஆதிக்கக்காரர்கள் ஆளுகிறார்கள். எடுத்ததற்கெல்லாம் வடநாட்டானுக்கே பிரைஸ் விழுகிறது. அந்த அளவுக்கு நம்திராவிடம் அடிமை படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிமைத்தனத்தை ஒழித்து திராவிடத்தை மீட்கப்போகிறோம். இது உறுதி. அதற்குப் பிறகு நீங்கள் அங்குவர எண்ணுவதில் அர்த்தமுண்டு. ஆனால் இன்று அங்கு வந்து அவதிப்படவேண்டாம். இந்த நாட்டில் வாழும்வரை இந்த நாட்டுக்கு பாதகம் எண்ணாமல் இருந்து வாருங்கள் என்று விளக்கிக் கூறி தமது சொற்பொழிவை முடித்து விடை பெற்றுக் கொண்டார்.

இச்சொற்பொழிவைத் தீட்டியவர்:—

—கிருஷ்ணன், காஜாங்,

★

பெரியாருக்கு சென்னையில் வரவேற்பு

பர்மா, மலேயா நாடுகளில் சுற்றுப்பயணம் சென்று 17-1-55-ல் தாயகம் வந்தடைந்த பெரியார் அவர்களுக்கு சென்னை மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

அன்று பிற்பகல் 4 மணிக்கு கிளைவ் பாட்டரியிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு—பாண்டு வாத்திய முழக்கத்துடன் பிராட்வே, சைனாபஜார், சென்ட்ரல் ஸ்டேஷன், சிந்தாதரிப்பேட்டை, மவுண்ட்ரோட் வழியாக திருவல்லிக்கேணி கடற்கரையை—பொதுக்கூட்ட மேடையை அடைந்தது. பெரியார் அவர்களுக்கு வழிநெடுகிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள்திரளான பொதுக்கூட்டத்தில் பெரியார் அவர்கள் தனது வெளிநாட்டு சுற்றுப்பயண சம்பவங்களைப் பற்றியும் — புத்தர் மாநாட்டின் நிகழ்ச்சியினைக்குறித்தும் விளக்கிப் பேசினார்.

ப. தி. மு. க. புத்தாண்டுத் தேர்தல்

ப. தி. மு. க. புத்தாண்டுத் தேர்தல் 25–12–54 திராவிடரகத்தில் மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். வள்ளிநாயகம் முன்னிலையில் தி. மு. க. செவலாளர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது செயலாளராக தோழர் சி. த. மு., இர. ஆரிசங்காரன், துணைச் செயலாளராக சா. தர்மராசன், பொருளாளராக கே. எஸ். கண்ணதாசன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் என். வி. நயினார், இரா.மா. சண்முகராசன், எஸ். வள்ளிநாயகம் வடவைக்குயில் புத்தரசு, எஸ். தங்கையா, த. மு. பொற்கோ. ஏ. எல். பெருமாள், பி. எஸ். செல்லையா, மா. இரா. குறள்தாஸன், மா. அண்ணாமலை, கோதைராசன், டி. வி. துரை, எஸ். ஏ. செல்லையா, மா. இரா. ஏ. ரெத்தினசாமி, சொல்லழகன், எம். எஸ்.கணபதி ஆகியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் முடிவுரைக்குப் பின் துணைச்செயலாளர் இரா. ம. சண்முகராசன் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

செயற்குழுக் கூட்டம்

பம்பாய் தி. மு.க. செயற்குழுக் கூட் 16—1—55 மாலை சுமார் 6–30 மணியளவில் திராவிடரகத்தில் தோழர் சு. வள்ளிநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

படிப்பக பொறுப்பாளராக தோழர்கள் என். வி. நயினார், இரா. மா. சண்முகராசன் ஆகியோரும் தணிக்கையாளராக தோழர் எஸ். தியாகராசன் மாவட்டக் குழு பிரதிநிதிகளாக தோழர்கள் சு. வள்ளிநாயகம், எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, ஏ. எல். பெருமாள் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிடன்

சென்னை : 21—1—55 : வெள்ளி

ஆவடி அறிவுறுத்துமா?

●

அனைத்திந்திய காங்கிரசின் அறுபதாவது மாநாடு ஆவடியில் நடைபெற்று வருகிறது. அதன் முடிவுகள், அதனைத் தழுவிய செயல் முறைகள் எவ்வாறிருக்கும் என்பதைக் குறித்து மாநாட்டின் முழுவிவரம் அறிந்த பின்னரே அதாவது அடுத்த வாரம் நமது கருத்தினை தெரிவிக்க விரும்புகிறோம். அதுதான் முறையுங்கூட.

எனினும் தேசீயம், ஏகஇந்தியா என்பவைகளின் பேரால், இந்தியத் துணைகண்டத்தின் மிகமுக்கிய பகுதியாகிய திராவிடம்—தென்னாடு கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக, அரசியல் பொருளாதாரத் துறைகளிலிருந்து மொழித்துறைவரை அடிமைப்படுத்தப்பட்டு வருவதை தென்னாட்டுக் காங்கிரசிலுள்ள அரசியல் யூகம் படைத்த தோழர்களாவது உணர்ந்திருப்பார்களென்று நம்புகிறோம்.

"ஏக இந்தியா" என்ற பிடிப்பிலிருந்து விடுபட்ட பர்மா, பாக்கிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளும், அந்நாட்டு மக்களும் பிரிவினைக்குப் பிறகு பிச்சை யெடுக்கின்றனர்; அரசியல் துறையில் படுபாதாளத்தில் ஆழ்ந்துவிட்டனர்; தொழில் துறையிலோ மகா மட்டம், என்பதாக நேருபண்டிதர் போன்ற தலைவர்கள் கூட கூறமுடியாது. இன்னும் சொல்லப்போனால் 'ஏக இந்தியா' என்ற இரும்புப் பிடியிலிருந்து விடுபட்ட பின்னர் அந்நாடுகள் அகில உலக அரசியல் அரங்கிலும் தலைநிமிர்ந்து நடைபோடத் துவங்கியுள்ளன.

அதுமட்டுமா? பாக்கிஸ்தான் போன்ற நாடுகள் தனி உரிமைப் பெற்ற அந்நாடுகளை "ஏக இந்தியா" என்ற பிடிப்பில் அடக்கியாண்டுவந்த ஏகாதிபத்திய கோஷ்டியினருக்கு நட்டமும் தங்களின் ஜபர்தஸ்து துண்டிக்கப்பட்டுவிட்டதே என்ற அங்கலாய்ப்பும் இருந்து வருவதைக் காண்கிறோமேயல்லாது அந்நாடுகளிலுள்ள மக்களோ ஆட்சிபீடத்தினரோ ஏன் டாக்டர் கான்சாகிப் போன்ற "தேசிய மனப்பான்மை" படைத்த பாக்கிஸ்தான் தலைவர்களோ தனி உரிமை பெற்றதில் தங்கள் நாட்டுக்கு ஆபத்து நேர்ந்து விட்டது என்று கூறவில்லை. அதற்குப் பதிலாக தங்கள் நாட்டை இன்னும் எந்தெந்த வகையில் வளப்படுத்துவது, ஆட்சி முறையை அமைப்பது என்ற ஆக்க வேலையில் கவலை செலுத்தி வருகின்றனர்.

இவ்வளவு நேர்மையான எடுத்துக் காட்டுகளையும் சம்பவங்களையும் நினைவூட்டி திராவிடம் தனி உரிமை பெற்று அனைத்திந்திய மாநிலங்களுடன் தோழமையுடன் இயங்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுவதை குறுகிய மனப்பான்மை, நாட்டுப் பிரிவினை நாசத்தை விளைவிக்கும், பிரிவினை மனப்பான்மை கூடாது—அந்த இயக்கத்தை ஒழித்துக் கட்டிவிடுவோம் என்றெல்லாம் ஆதிக்கம் செலுத்துவோர் கூப்பாடு போடுவதும், அரசியல் அதிகாரம் தங்களிடத்தில் சிக்கிக்கொண்டது என்ற ஒரே காரணத்திற்காக அடக்குமுறைகளை ஏவி கொடுமைப் படுத்துவதும், தடித்த வார்த்தைகளால் வசைமாரி பொழிவதும் நேர்மையாகுமா, நீதியுடையதுதானா என்பதை ஆவடி மாநாட்டிலே கூடும் தென்னாட்டுத் தேசியத் தலைவர்களும் தோழர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆதிக்கக்காரர்கள் போடும் கூப்பாட்டுக்கு ஏற்ப தலையாட்டுவது உண்மையான தேசபக்தியாகாது. ஆதிக்கம் செலுத்துவோரின் கோணங்கித்தனத்தைத் தட்டிக் கேட்க முடியாத கோழைத்தனம் என்றே எதிர்காலம் குற்றம் சாட்டும். இதனை தமிழகத்திலுள்ள தேசியத் தோழர்கள் குறிப்பாக ஆவடிக்குச் செல்லும் காங்கிரசார் மனதில் கொள்ள வேண்டுகிறோம்.

இந்தியத் துணைகண்டத்திலிருந்து நாங்கள் தனியாட்சி பெறவேண்டும் என்று போர் முரசு கொட்டி வெற்றி பெற்ற பர்மா, இலங்கை, பாக்கிஸ்தான் மக்கள் தேசத்துரோகிகள் என்று, ஒருவரோ—ஒரு சாராரோ வசைமாரி பொழிவதென்றால், ஒன்று அப்பேர்பட்டவர்களின் மூளையில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்றோ அல்லது அவர்கள் அரசியல் அறியாத எத்தர்கள் என்றோ இல்லையெனில் உண்மையையும், உரிமையையும் பறிக்கும் ஆதிக்க வெறியர்கள் என்று தானே இன்றைய உலக அரசியல் அரங்கு தீர்ப்பளிக்கும்.

எனவே பாக்கிஸ்தான்-பர்மா இலங்கை போன்ற நாடுகளைவிட இயற்கை வளப்பமும், அறிவாற்றலும் மற்ற சிறப்புக்களனைத்தையும் பெற்றுள்ளதும், இந்தியாவிலேயே தலைசிறந்த பகுதியுமாகிய நமது திராவிடம் மற்ற எந்த நாட்டினர்மீதும் மாநிலங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்த விரும்பாத, நேசநாடுகளில் ஒன்றாகத் திகழ வேண்டுமென்று கேட்பதை அரசியலில் நேர்மை உள்ளம் படைத்தவர்களாயிருப்பவர்கள் குற்றம் சொல்ல முடியுமா என்று கேட்கிறோம்,

திராவிடம்—இன்று மொழித் துறையில் அடக்கியாளப்படுகிறது. இதற்கு சான்றாக நாம் பல நிகழ்ச்சிகளைக் கூறமுடியுமென்றாலும், அண்மையில் டெல்லிப் பாராளுமன்றத்தில் நமது மாநிலத்தின் முன்னாள் கல்வி அமைச்சர் தோழர் அவினாசிலிங்கனார் நடத்தப்பட்ட விதத்தை நினைத்தாலே மனம் குமுறுகிறது. அதுபோலவே தொழில் துறையில் நம்மாநிலம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது போதாதென்று, சேலத்தில் இரும்பு தொழிற்சாலை துவக்கும் பிரச்னையிலும் மண்ணை அள்ளிப்போட முனைந்துவிட்டது. அரசியல் துறையிலோ நாம் விவரிக்கத் தேவையில்லை.

இந்த அவலநிலை ஒழியும் வகையில் வடநாட்டு ஏகாதிபத்ய கும்பலுக்கு அறிவுறுத்தவே ஆவடி மாநாடு பயன்பட வேண்டும் என்பது நமது எண்ணமாகும்.

திராவிடத்தின் சிறப்பைப் பற்றியும் பெருமையைப் பற்றியும் பெரிய தப்பட்டை கொண்டு அடிப்பது போல புகழ்ந்துவிட்டு மற்றொருபுறம் அதே திராவிடத்தின் வாழ்வையும் தன்மானத்தையும் சிதைவுறச் செய்யும் வித்தையில் நேரு பண்டிதர் போன்ற வடநாட்டுத் தலைவர்கள் இறங்கியுள்ளனர், இதனை அறியாது வெறும் புகழுரையில் தென்னாட்டு தேசியத் தோழர்கள் மதி மயங்கி விடக்கூடாது.

தென்னாடு மட்டுமல்லாது, அனைத்திந்தியாவிலுமுள்ள ஒவ்வொரு மாநிலமும் தனி உரிமையுடன் ஆட்சி செலுத்தி அந்த மாநிலங்களனைத்தும் ஒன்று சேர்ந்த ஒரு பேரவை (நேசப்பான்மையில்) அமைந்தால் அதன் மூலமாக மட்டுமே அனைத்திந்தியாவின் ஒற்றுமையை விரைவில் காண இயலுமே யல்லாது—ஒரு பகுதியினர் (அதிலும் இயற்கை வளப்பத்திலும், அறிவாற்றலிலும் இரண்டாந் தரத்திலுள்ளவர்கள்) பிறபகுதியினரை ஆதிக்கம் செலுத்திக் கொண்டே, இந்தியாவின் ஒற்றுமை ஓங்க வேண்டுமென்று உரத்த குரலெழுப்புவது அரசியல் தெளிவு படைத்த செயலாகாது என்பதுடன் இந்த பத்தாம் பசலிக் கொள்கை நீடித்து நிற்கவும் முடியாது என்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம்.

சின்னஞ்சிறு நாடுகளும், தூங்கிக் கிடந்த மக்களும் இன்று உலக அரங்கிலே தட்டிப் பேசும்போது நாட்டை ஆண்ட திராவிடர்கள்—அனைத்திந்தியாவிலும் அரசியல் அறிவாற்றலில் மிக்கவர்கள் என்று உலகத்தினரால் போற்றப்பட்டுவரும் தென்னாடும், தென்னாட்டு மக்களும் கண்மூடித்தனமான தேசியத்திற்கு மேலும் இரையாகக் கூடாது என்பதை திராவிட நாட்டு தேசியத் தோழர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இக்கொள்கைக்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் பணியாற்றி வருகிறதே யல்லாது, வெறும் கட்சி ஆட்சி ஆதிக்கத்துக்காக அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே ஆவடி மாநாடு—இத்தகு ஆக்கப்பணிக்கு திட்டம் தீட்டியது என்றிருக்க வேண்டுமேயல்லாது நிமிடத்திற்கு மூவாயிரம் இட்டிலி தயார் செய்தனர்; வடநாட்டவர்களுக்கு கோதுமை உணவு அளிக்கப்பட்டது; இதைப்போல மாநாடு இந்தியாவில் இதுவரை நடந்ததேயில்லை; நேருவே பிரமித்துவிட்டார், காமராசரை தட்டிக் கொடுத்தார்; என்ற வீண் பெருமைகளைப் பேசிக்கொண்டும், பத்தி பத்தியாக செய்திகளை வெளியிட்டுப் பெருமை கொள்வதிலும் பயனில்லை, ராஜா சர். முத்தையா அவர்களின் மாளிகையில்கூட அதுவும் சாதாரண காலங்களில் நடத்தப்படும் விருந்து ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறதென்றால், ஆவடி காங்கிரசுக்குப் பத்துலட்ச ரூபாய் செலவாகியது என்று மட்டும் பெருமைப் பேசிக்கொள்வதில் அர்த்தம் இருக்கமுடியாது.

நாம் இப்படிக் கூறுவதால், தென்னாட்டுக் காங்கிரஸ் தோழர்கள் இவ்வளவு சிரமத்துடன் நடத்தும் மாநாட்டைப்பற்றி பூரிப்படையக் கூடாது, சிறப்பினை பேசிக் கொள்ளக் கூடாது என்று சொல்வதாக கருதிவிட வேண்டாம். இவ்வளவு பெரிய மாநாட்டினை நடத்துவதற்கு உழைத்த தோழர்கள் பூரிப்படைந்து பேசுவதை நையாண்டித்தனம் செய்வது மனிதாபிமானமுமாகாது என்பதை நாம் அறிவோம். ஆனால் அந்த அளவுக்கு நம் மாநிலத்தின் நல்வாழ்வை நிர்ணயிக்கும் பிரச்னையிலும் காங்கிரஸ் தோழர்களுக்கு எண்ணமும் அதற்கான உறுதியும் இருக்கவேண்டும் என்பதே நமது இந்த எடுத்துக்காட்டாகும்.

ஆவடி காங்கிரஸ் நம்நாட்டிலுள்ள ஏழை எளியோரின் துயர் தீரும் வகையில் ஆதிக்கக்காரர்களுக்கு அறிவுறுத்துமா அல்லது துதிபாடி தூபம் போடுமா? என்பதே திராவிடத்தின் இன்றைய கேள்விக்குறி என்பதை தென்னாட்டு தேசியத் தலைவர்கள் உணர்வார்களாக.

●

மதுரை மாநாட்டின் சிறப்பு

மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாடு இத்திங்கள் 8-9-ம் நாட்களில் சிறப்புற நடைபெற்றிருக்கிறது. இம்மாநாட்டின் சிறப்பினையும் அதன் வெற்றியினையும் விவரிப்பதென்பது சொல்லிமுடியாது. அந்த அளவுக்கு மாநாட்டின் வரவேற்புக் குழுவினர் எடுத்துக்கொண்ட முயற்சியும் அக்கரையும் என்றும் மறக்க முடியாததாகும். மதுரை மாநாடு இதுவரை நடைபெற்ற மாவட்ட மாநாடுகளனைத்துக்கும் மகுடம் சூட்டியதைப் போல எல்லாவகையிலும் இனிது நடந்தேறியிருக்கிறது.

மாநாட்டின் மகத்தான வெற்றிக்கு முக்கிய காரணம் மாநாட்டுத் தொண்டர் படையின் சிறப்புப் பணியேயாகும். மதுரை மாநாட்டுத் தொண்டர்படைத் தலைவர்களும் தொண்டர்களும் காட்டிய பரிவையும் கடமை உணர்ச்சியையும் என்றுமே மறக்க முடியாததாகும். அவர்களின் தூய்மையான பணி மேலும் வளர்ந்து கழகக் கொள்கை வெற்றியுற உறுதுணையாய் அமைய வேண்டுமென ஆசைப்படுகிறோம்.

இத்தகு சிறப்புத் தன்மையுடன் மதுரை மாநாடு நடைபெறுவதற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் தந்த அனைவரையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

கழக எதிர்காலப் பணிக்கு...

காசுகள் மட்டும் போதாது! கருத்துக்களும் தேவை!

மதுரை மாநாட்டில் அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவு

மதுரை நகரில் சிறப்புடன் நடைபெறும் இந்த மாவட்ட தி. மு. கழக மாநாடுகள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளன. மதுரை மாநாடு எல்லா வகையிலும் மிகச் சிறப்பான மாநாடாகும்.

மாவட்டந்தோறும் மாநாடு நடத்தி, பின்னர் மாநில மாநாடு நடத்துவது என்று நமது கழகச் சட்டத்தில் விதி இருக்கிறது; இதுவரை எல்லா மாவட்டங்களும் மாநாடுகள் நடத்தி முடிந்தாயிற்று. அந்த வரிசையில் மதுரை மாநாடுதான், மாநில மாநாட்டிற்கு முன்பு நடைபெறும் இறுதியான மாவட்ட மாநாடு.

அடுத்துவரும் ஜூன் மாதத்தில் மாநில மாநாடு நடத்தப்பட இருக்கிறது.

மதுரையில் மாநாடா? இந்த நேரத்திலா? வெற்றிகரமாக நடைபெறுமா? என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது. ஆனால் இந்த இரு நாட்களாக வெகு அமைதியுடன் சிறப்புற மாநாடுகள் நடைபெற்று முடிவுற்றிருக்கின்றன. இந்த மாநாட்டின் மகத்தான வெற்றியைக் காட்டி மாநில மாநாட்டை இங்கேயே நடத்த வேண்டும், என்று இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

திருச்சியில் மாநில மாநாடு நடைபெற வேண்டும் என்று விரும்புவதற்குக் காரணம், அது தமிழகத்தின் மத்தியில், எல்லோரும் கலந்து கொள்வதற்கு வசதியாய் இருப்பதாலேயேதான்.

இங்கேயே மாநில மாநாட்டினை நடத்தினால் நீங்களெல்லோரும் எவ்வளவு உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பணி புரிவீர்களோ அவ்வளவு ஊக்கமாகவும், உற்சாகமாகவும், திருச்சியில் மாநில மாநாடு நடைபெறும்போது நீங்கள் பணிபுரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியில் நடைபெறயிருக்கும் மாநில மாநாடு, தமிழ் நாட்டு அரசியலில் மகத்தானதோர் மாறுதலை உண்டுபண்ணவிருக்கிறது. எதிர்காலத்தில், தி. மு. கழகம், நாட்டின் அரசியலில் எத்தகைய பங்கைப் பெற வேண்டும் என்பது அந்த மாநில மாநாட்டில் தீர்மானிக்கப்படவிருக்கிறது. அந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட வேண்டும் என்று கருதுகிற கருத்துக்களைத் தோழர்கள் ஒவ்வொருவரும் தயக்கமின்றிக் கூற வேண்டும்.

மற்ற எல்லா கட்சிகளுக்கும், தலைவர்களிடமிருந்து உத்தரவு வரும்; தோழர்கள் பின்பற்றுவர். உத்தரவுப்படி நடப்பர் ஆனால் தி. மு. கழகம் அத்தகைய கழகமல்ல நமது கழகத்தில் வளர்ந்துள்ள குடும்பப் பாசமும், தலைசிறந்த பண்பும்தான் நல்ல ஜனநாயகத்திற்கு அடிப்படையாகும். அந்த அடிப்படையில், தோழர்கள் ஒவ்வொருவரும் தங்கள் எண்ணங்களை—உளளக் கிடக்கைகளைத் தெளிவாக எடுத்துக் கூறவேண்டுமென்று நான் விரும்புகிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் அந்த உரிமை உண்டு.

காங்கிரஸ் கட்சியினர், இன்று 'நேருவுக்குப் பிறகு யார்?' என்ற கேள்விக்கு விடை காண இயலாது வருந்துகிறார்கள். நேருவே ஒரு முறை புனைப் பெயரில், தான் எழுதிய கட்டுரை ஒன்றில் 'நேருவை ஜூலியஸ் சீசரைப்போல் ஒரு சர்வாதிகாரியாக்கினால் அது நேருவுக்கும் நல்லதல்ல; நாட்டிற்கும் நல்லதல்ல, என்று கூறியிருக்கிறார்.

காங்கிரஸ்காரர்கள் கோபப் படாமல், ஆத்திரப்படாமல் எண்ணிப் பார்ப்பார்களேயானால், நேருவுக்குப்பின் யார்? என்ற கேள்விக்குள்ள உண்மையான பொருள் விளங்கிவிடும்.

ஆகவேதான், கழகத்தில் நல்ல ஜனநாயக மணம் கமழ உதவும் வகையில் தோழர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைக் கூற வேண்டுகிறேன்.

கடந்த ஆண்டில் நாம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின்போது நாங்கள் எல்லாம் கைது செய்யப் படாமலிருந்தால் கூட தோழர்கள் அத்தனை வெற்றிகரமாக போராட்டத்தினை நடத்தியிருப்பார்களோ என்னவோ? போராட்டங்களின்போது கழகத் தோழர்களிடம் இருந்த நெஞ்சுத் துணிவும், நேர்மைத் திறனும் பாராட்டுதலுக்குரியவையாகும். அந்த உறுதியான சக்தி ஜனநாயக உணர்ச்சி கொண்டதாகயிருக்க வேண்டும்.

ஒவ்வொரு சாதாரண உறுப்பினர்களும், மாநில மாநாட்டின்போது தங்களின் கருத்துக்களை அளிக்க வேண்டும்.

மாநில மாநாடு துவங்க, நீங்கள் காசுகளை மட்டும் தாருங்கள் என்று கேட்கமாட்டேன்; கருத்துக்களையும் தாருங்கள் என்று கேட்கிறேன்.

ஆச்சாரியார் ஆட்சிபீடத்தில் நுழைந்தபோது, நாம் ஆச்சர்யப்படவில்லை. அவர் ஆட்சியில் திராவிடருக்கு ஏதேனும் தீங்கு செய்வார் என்பதை நாம் நன்றாக அறிந்திருந்தோம். அவர் கல்வித் திட்டத்தை புகுத்தியபோதும் நாம் திகைக்கவில்லை.

ஆனால், காமராசர் முதன் மந்திரியானார். ஆச்சாரியார் கல்வித் திட்டத்தினைக் கைவிட்டு விட்டதின் மூலம் நாட்டு மக்களின் எண்ணத்திற்கு மதிப்பளித்தார் என்று மகிழ்ந்தோம். பாசத்தையும், நேசத்தையும் காட்டினர், நாட்டவர். அந்த நிலைமையில் காமராசரின் ஆட்சி நாட்டவருக்கு ஒரு துளி ஏமாற்றத்தை அளித்தாலும் நாட்டவர்கள் திகைப்பார்கள்-ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ள இயலாதவராயிருப்பர் என்பதை காமராசர் அறிந்து கொள்ள வேண்டும்.

நல்ல வாய்ப்பு

காமராசருக்கு இப்போது ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது; இந்த மாதத்தில் ஆவடியில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மாநாடு நடைபெறவிருக்கிறது. அங்கு பெரிய பெரிய தலைவர்கள் வரவிருக்கிறார்கள், பெரிய பெரிய பிரச்னைகள் அங்கு பேசப்படவிருக்கின்றன.

தபால்காரராகவாவது பணிபுரிவாரா?

அந்தப் பெரிய தலைவர்களுக்கு, திராவிடத்தின் நிலை தெரியாது. அவர்களின் கவனமெல்லாம் பெரும் பிரச்னைகளில் செலுத்தப்பட்டிருக்கும். அந்தப் பெரிய தலைவர்களுக்கு திராவிடத்தின் இன எழுச்சியை, உரிமைக் கோரிக்கையை எடுத்துக் கூறுவதற்கு காமராசருக்கு இதைக் காட்டிலும் வேறு நல்ல வாய்ப்பு கிடைக்க முடியாது.

தென்னாட்டின் இன்றைய நிலை குறித்து உணர மறுக்கும் உயர்ந்த தலைவர்களுக்கு, உண்மை நிலையை காமராசர் உணர்த்த வேண்டும்.

'தபால்கார'ராக—இங்குள்ள நிலைகளை அங்கு தெரிவிப்பவராக—காமராசர் இருந்தால் போதுமானது.

டால்மியாபுரத்தை கல்லக்குடி என்று மாற்றுங்கள், என்று காமராசர் நேருவிடம் கூறலாம்.

டால்மியா கோபித்துக் கொள்வாரே என்று நேரு கூறினால் உடனே காமராசர் உங்களுக்கென்ன தெரியும், இங்குள்ள நிலைமைகள். ஒருவர் கோபிப்பாரென்பதற்காகப் பலரின் கோரிக்கையைப்புறக்கணிக்கலாமா? என்று கேட்க வேண்டும்.

இப்படி நாட்டு நிலைமைகளை அவரது தலைவர்களிடம் தெரிவிக்கும் தபால்காரர் பணியினைக் கூடவா காமராசர் செய்ய முடியாது.

திருச்சியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற உழவர் மாநாட்டில் முதன்மந்திரி ஓமந்தூராரும் யானும் கலந்து கொண்டபோது, ஓமந்தூரார் அவர்கள், 'எல்லாம் சரி அண்ணாதுரை; திராவிட நாடு பெறவேண்டுமானால் உன்னிடம் கப்பல் படையில்லை; விமானப்படையில்லை; இராணுவம் இல்லை. இவையெல்லாம் இல்லாத நீ, இவைகளை வைத்துக் கொண்டிருக்கிற வடநாட்டவரிடம் எப்படிப் போராடி திராவிடநாடு பெற முடியும்? எனவே முதலில் படைகளைத் தயாரித்துக் கொண்டு பிறகு பார்க்கலாம்' என்று கூறினார். அதற்கு யான் இந்தப் படைகளை, நாம் விரும்பினால்கூட அவற்றை வைத்துக் கொள்ள இயலாது. இந்தப் படைகளை வைத்துக் கொள்ளும் அதிகாரம் வடநாட்டவர்களிடமே இருக்கிறது, என்று எடுத்துக் கூறினேன். ஓமந்தூராருக்கோ காமராசருக்கோ அரசியல் புரிந்திருப்பது அவ்வளவுதான்!

நியாயமானது

நமது இலட்சியம் வெகு நியாயமான கோரிக்கையைக் கொண்டது. வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு நாட்டு நிலைகளை எடுத்துக் காட்டி, நாம், நமது நாடு நமக்காக வேண்டுமென்கிறோம், நமது கோரிக்கை நமது பிறப்புரிமையாகும். அந்த உரிமையை மிகச் சாதாரணமாகியவர்களாகிய நாம் எப்படிப் பெறப்போகிறோம்—நிலைநாட்டிக் கொள்ளப் போகிறோம். என்று கேட்கிறார்கள் சிலர். அவர்களுக்குச் சொல்கிறேன்—நாம் மிகச் சாதாரணமானவர்கள்; சாமானியமானவர்கள்தான்; அதனால்தான் கேட்கிறோம்—நமக்கு சுதந்திரம் வேண்டுமென்று

சாமானியர்கள்தான்!

மறந்துவிடக்கூடாது—இப்போது நடப்பது சாமானியர்கள் யுகம் என்பதை! பாமரர்கள் பாராளும் காலமிது என்பதை!

எனவே கழகத் தோழர்கள் நல்ல பண்புகளுடன் கழகத்தினை வளர்க்கவும், கழக வேலைகளில் வேகமாக ஈடுபடவும், வேலையிலீடுபடுகையில் மிகுந்த ஆர்வத்துடனும், ஆனால் ஆர்பாட்டமின்றியும் பணி புரிந்து, இலட்சியத்தை அடையப் பணி புரியக் கேட்டுக்கொள்கிறேன்

மதுரை நிகழ்ச்சிகள்

சமூக சீர்திருத்த மாநாடு

★

சமூக சீர்திருத்த மாநாடு 8—1—55 சனியன்று காலை 10 மணியளவில், தோழியர் பி. எஸ். செல்வா குழுவின ரின் இன்னிசை விருந்துடன் துவங்கி யது.

"சுப்ரமணியன் என்ற பெயருடைய ஒருவன் பார்வதி என்ற பெயருடைய ஒரு பெண்ணை மணந்து கொள்கிறான். புராணப்படி, சுப்ரமணியனுக்கு பார் வதி தாயாகிருள்; ஆனல், நாட்டில், பார்வதி தனயனுக்குத் தாரமாகிருள்: இப்படி 'சிற்தலீலா'க்களும், 'சிவலீலா'க் களும் நாட்டில் நடைபெறுகின்றனவே இவற்றை யார் கேட்பது! தடுப்பது!" என்ற முழக்கத்துடன் தோழர் தில்லை வில்லாளன் மாநாட்டினைத் துவக்கி வைத்தார்.

அடுத்து, வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். வி. தொந்தி 'ஏன் சமூக சீர் திருத்த மாநாடு! என்ற கேள்விக்கு விடை தெரிந்துபோக வந்துள்ளோரை யும் மற்ருேரையும் வரவேற்றுப் பேசி விட்டு தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களை மாநாட்டுற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டு முன்மொழிந்தார்.

அதனை வழிமொழிந்து 'ஒரு நாட்டில் பெண்கள் திருந்திவிட்டால் நாடே திருந்திவிட்டது போலாகும் என்ற உண்மைக் கொப்பவே ஒரு பெண்மணி யை சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க தேர்ந்தெடுத்துள் ளோம்.' என்பதாக மதுரை மாவட்டத் தோழர்களான பேக்கர், பி. எஸ். மணி யன், வசனப்பித்தன், சமதர்மம், ஆவு டையப்பன், ஆகியோர் பேசினர்.

'மத சார்பற்ற சர்க்கார் என்பது ஏட்டளவில்தான்— நடைமுறையில் இல்லையே! சென்னை அரசாங்கத்தின் முத்திரைச் சின்னம் ஒரு கோவில்— இந்து மதச் சிறப்புடன் கூடிய கோவில். இதற்குப் பெயர் மதச்சார் பற்றதென்பதா!"

இப்படிக் கேள்விகளை எழுப்பி இன் றைய காங்கிரஸ் அரசாங்கத்தின் பிற் போக்குத் தன்மையையும், சொல்வேறு —செயல் வேருயுள்ள நடைமுறையை யும் இடித்துக்காட்டி, புதுமைக் கருத் துக்களையும், கொள்கைகளையும் ஏற்றுக் கொள்ள சமூகத்தை தயார் செய்வதே கழகம் செய்துவரும் சீர்திருத்தப் பணி யின் நோக்கம் என்பதையும் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்— தோழியர் சத்தியவாணிமுத்து அவர் கள்.

அடுத்து அருப்புக்கோட்டைத் தோழர் எம். எஸ். இராமசாமி அவர் கள் 'மதத் தத்துவம்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றுகையில் இந்து மதம், கிறிஸ்துவ மதம், முஸ்லிம் மதம், பௌத்த ஜைன மதங்கள் மற்றும் இந்துமதத்திற்குள்ளேயே பிரம்மஞான மதம், சைவ மதம், வைணவ மதம் என்று இப்படியாக உள்ள எண்ணற்ற மதங்களை கூறி அவை ஒவ்வொன்றும் என்ன என்ன தத்துவங்களை—கொள் கைகளை கொண்டது என்பதையும் விளக்கி ஒவ்வொரு மதத்தின் தத்துவ மும் எப்படி இன்னொரு மதத்தத்துவத் துடன் மாறியிருக்கிறது என்பதைத் துலங்கவைத்து 'எம்மதமும் சம்மதமே எமக்கு' என்ற புரட்டு மக்களை ஏய்ப்ப தற்கேயன்றி வேறெதற்கும் இல்லை என் பதையும் அம்பலப்படுத்தி மதத் தத்து வங்கள் மக்கள் முயற்சி செய்து வாழ்க் கையில் முன்னேற வொட்டாது எப்ப டித்தடுக்கின்றன என்பதையும் விளக்கி அந்த நிலை மாறி, மனிதர்கள் அறிவுபூர் வமாக சிந்தித்து முயற்சி செய்து வாழ் வில் முன்னேற்றங்கான மதத் தத்து வங்கள் மக்களிடமிருந்து அகற்றப்பட்டு —அழிக்கப்படவேண்டும் என்று எடுத் துரைத்தார்.

அத்துடன் இடைவேளைக்காக மாநாடு கலைந்தது.

மாலை நிகழ்ச்சிகள், இசைமுரசு நகூர் அனீபா, தோழியர் பி. எஸ். செல்வா ஆகியோரின் இன்னிசை முழக் கத்துடன் 3 மணி சுமாருக்குத் துவங் கின.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் திராவிடரின் விடுதலை வேட்கையை விரிவாக எடுத்துக் கூறினர். எந்த அர சியலும் நிலைபெற்று நிற்க, மக்கள், அவ்வப்போது சீர்திருத்தப்பட வேண் டும் என்பதை எடுத்துக் காட்டினர்.

பின்னர் தோழர் சிவநேசம் அவர் கள் சிறிது நேரம் பேசியதும், தோழி யர் அருண்மொழி அவர்கள் கோ லோச்சுபவனிடம் கோமாளிக் கூத்தனு யிருந்த தெனுலிராமனின் ஒரு கோமா ளிச் செய்கை எப்படி பார்ப்பன எதிர்ப்பை வெளிக்காட்டுகிறது என்ற கதையைக் கூறினர்.

'காலமும் கருத்தும்' என்ற தலைப்பில் சிறிது நேரம் தோழர் க. அறிவழகன் பேசினர்.

தோழர் என். வி. நடராசன் அவர் கள் 'அன்றும் இன்றும்' என்ற தலைப் பில் வளர்ந்துவரும் தி, மு. கழகத்தின் கடந்தகால வளர்ச்சி வரலாற்றை வெகு சிறப்பாக தமக்கே உரித்தான பாணி யில் எடுத்தியம்பினர்.

பின்னர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் 'சமூகம் திருந் தவும் மக்கள் பகுத்தறிவு பெறவுமான சட்டங்களை இயற்ற வேண்டிய பெரும் பொறுப்புள்ள சர்க்கார், திருந்திவரும் சமூகத்தை திருந்தவொட்டாமல் செய்ய தடுப்புச் சட்டங்களை இயற்றி வருவது விந்தையா யிருக்கிறது; வேதனை தருவ தாயுள்ளது. மதச் சார்பற்ற சர்க்கார் என்ற அரசியல் சட்டத்தின் நோக்கம் நாளுக்கு நாள் சிதைந்து வருகிறது— அரசாங்கத்தின் ஆகாத போக்கால், பழ மையையும், மதக் கருத்துக்களையும் பாதுகாக்க சட்டமியற்றும் போக்கால" என் [illegible].

இறுதியாக தோழர் அ. பொன்னம் பலனர் அவர்கள் 'எண்ணவும், எண் ணியதை எடுத்துச் சொல்லவும் இய லாத அந்த நாட்களில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நாம் துவங்கிய சீர்திருத்தப் பணி இன்று வெற்றி பெற்று வருகிறது—மக்களால் வரவேற் கப் படுகிறது. இடைவிடாத நமது பணி, புராணப்படி புண்ணிய க்ஷேத்தி ரங்களில் ஒன்ருன மதுரை மாநகரில் இவ்வளவு பெரிய அளவில் பிரம்மாண்ட மானதோர் பந்தலில் சீர்திருத்த மாநாடு நடைபெறுவதன் மூலம் எத்தகையது என்பது நன்கு எடுத்துக் காட்டுகிறது. என்று கூறிவிட்டு, மக்களின் மட மையை மாய்க்கவும் மத நம்பிக்கையை தகர்த்து மக்கள் முயற்சியில் நம்பிக்கை வைக்கவும், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற நிலை மாறவும் கழகம் என்ன சொல்கிறது என்பதை விளக்கிக் காட் டினர்.

அடுத்து தோழர் ஏ.வி.பி. ஆசைத் தம்பி அவர்கள் 'சமூக சீர்திருத்தம் ஏன் அவசியம், என்பதை தக்க கார ணங்களுடன் விளக்கி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

இறுதியாக இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பக்திநெறி—பகுத்தறிவுநெறி இவை இரண்டிற்குமுள்ள வேறுபாடு களை எடுத்துக் கூறி, முன்னையது மக் களை வாழ வைக்காது; பின்னையது மக் களை வாழவைக்கும் என்பதைத் தர்க்க ரீதியாக விளக்கினர்.

இத்தருணத்தில் மழை பொழியவே அவர், தமது உரையைச் சுருக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

இரவு 10 மணியளவில், எஸ். எஸ். இராஜேந்திரன் குழுவினரின் 'சந்திர மோகன்' நாடகம் சிறப்பாக நடை பெற்றது.

●

அரசியல் மாநாடு

9—1—55 ஞாயிறன்று மதுரை மாவட்ட தி. மு. கழக 2-வது அரசியல் மாநாடு காலை 10-30 மணியளவில் துவங்கியது. இசைமுரசு நாகூர் அனீபா தோழியர் பி எஸ். செல்வா இருவரும் இசை விருந்தளித்தனர்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்க விருந்த தோழர் மு. கருணாநிதி அவர் கள் கண்நோய் காரணமாக மாநாட்டில் கலந்து கொள்ள இயலவில்லை; தான் மாநாட்டின் தலைமை உரையாக நிகழ்த்தவிருந்த சொற்பொழிவின் சாரத்தினை மட்டும் எழுதி அனுப்பி யிருந்தார்.

வரவேற்புக் குழுச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் கேட் டுக் கொண்டதற்கிணங்க, தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ. அவர்கள்மாநாட்டினைத் திறந்துவைத்து அரியதோர் சொற்பெருக்காற்றினர்.

அடுத்து வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். வி. தொந்தி அவர்கள் அனைவ ரையும் வரவேற்றுப் பேசியதும் தோழர் மு. கருணாநிதி அவர்களுக்குப் பதிலாக தோழர் கோவை இராச மாணிக்கம் அவர்களை மாநாட்டிற்குத் தலைமை ஏற்குமாறு வேண்டினர்; அதனை வழிமொழிந்து தோழர் என். வி. நடராசன் பேசினர்.

தோழர் மு. கருணாநிதியின் சொற் பொழிவை அவர் சார்பில் வாசித்து விட்டு தோழர் ராஜமாணிக்கம் அவர் கள் தலைமை உரை நிகழ்த்தினர்.

பின்னர் தோழர் கே. ஏ. மதியழ கன் அவர்கள் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

அடுத்து தோழர்கள் சுரதா, எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசி னர்.

அத்துடன் மாநாடு இடை வேளைக் காக கலைந்தது

நிகழ்ச்சிகள் மீண்டும் மாலை 3–மணிக்கு புனுகு நடராசன், நாகூர் அனிபா ஆகியோரின் இசை முழக்கத்து டன் துவங்கிற்று.

பின்னர் மாநாட்டின் வரவேற்புக் குழுவினர் உருவாக்கிய தீர்மானங்கள் பலவற்றை கழக முன்னணி வீரர்கள் பலரும் முன்மொழிந்தும் வழிமொழிந் தும் பேசினர்.

அடுத்து தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள் சீரியதோர் சிறப்புரை நிகழ்த் தினர்.

மாநாட்டுச் செயலாளர், மாநாடு வெற்றிகரமாகநடைபெற ஒத்துழைத்த அத்தனைபேருக்கும் மாவட்ட வரவேற் புக் குழுவின் சார்பில் நன்றியறிதலை தெரிவித்து உரை நிகழ்த்தியதும் பொதுச் செயலாளர் அண்ணு அவர்கள் பெருத்த ஆரவாரப் பேரொ லிக்கிடையே எழுந்து கருத்துரை வழங் கினர்.

இறுதியாக இரவு 10 மணியளவில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரின் 'ஆசை நினைவு' எனும் நாடகம் சிறப்புற நடத்தப்பட்டது.

●

தீர்மானங்கள்

அனுதாபம்

சுயமரியாதை இயக்கத்தை தோற்று வித்த காலத்திலிருந்து—திராவிட முன் னேற்றக் கழகமாக தழைத்துள்ள இது நாள்வரை கொள்கைக்காகவே தூய்மை யான பணியாற்றியதோடல்லாமல் வழி காட்டியாகவுமிருந்து வந்த நமது மாவீரர் சவுந்திர பாண்டியனர் அவர் கள் இயற்கை யெய்தியமைக்கும், மதுரை மாவட்ட முதல் மாநாட்டின் தொண்டராயிருந்து பணியாற்றிய இளந்தாடி கோபால் அவர்களின் மறை வுக்கும் இம்மாநாடு மிகவும் வருந்துவ துடன் அவர்களின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

வரிவஜா

மதுரை மாவட்டம்—திருமங்கலத்

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதுரையிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை

„ 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்

மாநாடு

முடிவுகள்

...தில் இவ்வாண்டு பருவ மழை சரிவர பெய்யாததால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஆட்சி பீடத்தினருக்கு இம்மாநாடு எடுத்துக் காட்டுவதுடன் அவர்களின் வரியை அதாவது 1364-ம் பசலிக்கு வரியை வஜா செய்ய வேண்டுமென்றும் இம்மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

—சந்தானம்
—உசிலைத்தம்பி

...கவலை செலுத்துக!

தொழில் துறையில் மிக மிக பாதிக்கப்பட்டுள்ள நம்மாநிலத்தில்—சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப்பொருளைப் பயன்படுத்த தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் வற்புறுத்திப் பேசின தென்னாட்டு உறுப்பினர் அனைவரையும் பாராட்டுவதுடன் டெல்லி ஆட்சிபீடத்தினர் எவ்வகையிலும் இம்முக்கிய பிரச்னையை வீணான வாதங்களைக் கூறி தட்டிக் கழிப்பதற்கு இடமளிக்காமல் சேலத்தில் இரும்பு தொழிற்சாலையை அமைப்பதற்கு பாராளுமன்றத்திலுள்ள சென்னை மாநில உறுப்பினர்களும் சென்னை அரசியலாரும் பொதுமன்றங்களும் ஆவன செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

—எஸ். ஆர். சந்திரன்
சேலம், இ. அ. கிருஷ்ணன்

தமிழே ஆட்சி மொழி!

சென்னை அரசியலார் தங்கள் ஆட்சி மொழியினை தமிழாக ஏற்று அதை நடைமுறையிலும் கொண்டுவரவேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—எம். எஸ். ராமசாமி
—அரசுக்கண்ணன்

உத்திரவை மாற்றுக.

மதுரை திடீர் நகரில் கடந்த ஐந்து ஆண்டுகளாக சிறு குடிசைகள் அமைத்து வாழ்ந்துவரும் ஏழை மக்களை—அப்புறப்படுத்த வேண்டுமென்று சர்க்கார் கொண்டுள்ள திட்டத்தைக் கைவிடுமாறு இம்மாநாடு வற்புறுத்திக் கொள்வதுடன், திடீர் நகரத்தில் சுகாதார வசதிக்கேற்ப ரோடுகள், தண்ணீர் வசதி ஆகியவைகளைச் செய்து தர வேண்டுமென்று மதுரை மாவட்ட ஆட்சிமன்ற நிர்வாகத் தலைவரான கலெக்டர் அவர்களையும், மாவட்ட ஆட்சிமன்றத்தினரையும், சென்னை அரசியலாரையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—எஸ். முத்து, திண்டுக்கல் சமதர்மம்

ரத்து செய்க!

நாடகக் கலை மூலம் நாட்டிலே முற்போக்குக் கருத்துக்கள் வளர்ந்து வருவதைக் காணும் சில வர்ணாஸ்ரமிகளின் ...பாட்டுக்கு அஞ்சி, ஜனநாயகப் ...ண்பை அறவே மறந்து நாடகத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ள சென்னை அரசியலாரின் போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(அ) எதிர் கட்சிகளின் எதிர்ப்பையும் கலைஞர்களின் மனக் கொதிப்பையும், குறிப்பாகப் பொதுமக்களின் கண்டனங்களையும் நாள்தோறும் கண்டுவரும் சென்னை அரசியலார் — நாட்டிலே அமைதி நிலவவேண்டும் என்ற முக்கிய குறிக்கோளை எண்ணியாவது நாடகத் தடை சட்டத்தை உடனே ரத்து செய்யுமாறு இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ.,
—முகவை ஆர். எஸ். பாண்டியன்
—கலைத் தூதன்

அறிவுறுத்தி ஆவன செய்க

வடநாட்டு முதலாளித்துவ சுரண்டல் தன்மையின் சின்னங்களில் ஒன்றுயிருந்துவரும் டால்மியாபுரம் என்ற பெயரை கல்லக்குடியாக மாற்றவேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் அப்போராட்டத்தின் மூலமும் நம் நாட்டிலுள்ள சிற்றூர்—நகர, ஆட்சி மன்றங்களும் மற்றுமுள்ள பொது மன்றங்களும், குறிப்பாகப் பொதுமக்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது ஒருமித்த கருத்தைத் தெரிவித்துங்கூட இதுநாள்வரை 'கல்லக்குடி' என அதிகார பூர்வமாக மாற்றி அமைக்க முன்வராத டெல்லி ஆட்சி பீடத்தினரின் போக்கை இம்மாநாடு வன்மையாகக்கண்டிப்பதுடன், சென்னை அரசியலார் இப்பிரச்சினையை குறித்து டெல்லி ஆட்சி பீடத்தினருக்கு அறிவுறுத்தி விரைவில் ஆவன செய்ய வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்தி நினைவூட்டுகிறது

—திருச்சி எம். எஸ். மணி
—வசனப்பித்தன்

இலங்கை தமிழர்

வடநாட்டு அகதிகளின் பிரச்னை குறித்து அவ்வப்போது தக்க கண்காணிப்பும் பாதுகாப்பும் அளித்து வரும் டெல்லி ஆட்சியாளர் இலங்கை வாழ் திராவிடரின் அவல நிலை குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் வேண்டுகோள் வாயிலாகவும் கண்டனங்களின் மூலமும் அறிவித்திருந்தும் அதை பொருட்படுத்காத நேரு சர்க்காரின் மனப்பான்மையை இம்மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் விரைவில் இலங்கையிலிருந்து தாயகம்திரும்ப இருக்கும் ஐபாயிரம் தமிழர்களுக்கு இந்த நெருக்கடியான நிலையிலாவது தக்க பாதுகாப்பும் வசதியும் செய்து தர டெல்லி ஆட்சி பீடத்தினரை சென்னை அரசியலார் வற்புறுத்த வேண்டுமென்று இம்மாநாடு நினைவூட்டுகிறது. —இரா. சு. தங்கப்பழம்

—ஏ. வி. பி. ஆசைத்தம்பி
—சி. பி. சிற்றரசு

நடைமுறையில் கொண்டு வருக!

சென்னை மாநிலத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள், தங்களின் அவல நிலை குறித்து ஆட்சிபீடத்தினரிடம் எடுத்துக்கூறியும், கிளர்ச்சி செய்ததற்கும் ஏற்ப, பஞ்சாலைத் தொழிலாளரின் நிலையை நேரில் அறிந்து ஆவன செய்ய, சென்னை அரசியலாரே நியமித்த முக்கூட்டுக் குழுவின் தீர்ப்பைக்கூட இதுவரை நடைமுறைக்குக் கொண்டு வராமல், தொழிலாளரின் சாதாரண உரிமையையும் பறித்து வரும் மில் முதலாளிகளுக்குப் பாதுகாப்பு அளித்துவரும் சென்னை அரசியலாரின் போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன். சென்ற திங்கள் 21-ம் நாள் நாடெங்கும் நடைபெற்ற பஞ்சாலைத் தொழிலாளரின் அடையாள வேலை நிறுத்தத்தின் ஒருமித்த கோரிக்கைக்கு செவி சாய்க்கும் வகையிலாவது உடனே முக்கூட்டு கமிட்டியின் சிபாரிசுகளை நடைமுறையில் கொண்டுவர சென்னை சர்க்கார் முனைய வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது?

—தூத்துக்குடி எஸ். நடராசன்
—அன்பில் தர்மலிங்கம்

அமைதி காக்க

மதுரை ஆர்வி மில்லில் சமீபகாலமாக, டன்லப் பழையயில், பத்து சயிட் இவ்விரண்டு இடங்களிலும் மூன்று பேர் பார்த்துவந்த வேலையை இருவர் செய்யவேண்டுமென்று மில் நிர்வாகிகள் வற்புறுத்திவருகின்றனர். இதனால் அத்தொழிலாளரிடையே மனக்கொதிப்பு ஏற்பட்டிருப்பதால் நிலைமையை அமைதியாக முடிக்க சென்னை சர்க்கார் தலையிட்டு முன்போலவே தொழிலாளர்களின் எண்ணிக்கை இருக்குமாறு செய்ய இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—நல்லமாயன்
—நிலக்கோட்டை காத்தான்

வாபஸ் பெறுக!

மூன்று பேர்களும் அதற்குக் குறைவாகவும் வர்த்தக குமாஸ்தாக்கள் இருக்கும் கடைகளுக்கு ஷாப் சட்டத்திலிருந்து சென்னை அரசியலார் ஓராண்டு காலத்திற்கு விதிவிலக்களித்திருப்பதானது பல்லாயிரக் கணக்கான வர்த்தக குமாஸ்தாக்களுக்கு பாதகமான முறையில் இருப்பதால் மேற்படி விதிவிலக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் மேற்படி உத்திரவை வாபஸ் பெறும்படி சென்னை அரசியலாரை இம்மாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—தலைவர்

காலதாமதம் வேண்டாம்!

1. மொழிவழி மாநில அமைப்புப்படி திருவாங்கூர்—கொச்சியில் இணைக்கப்பட்டுள்ள ஒன்பது தமிழ் தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை நடைபெற்ற மாநாடுகளில் வலியுறுத்தி கூறிவந்துள்ளதை மீண்டும் இம்மாநாடு டெல்லி ஆட்சியினருக்கு வலியுறுத்தி நினைவூட்டுகிறது.

(அ) திரு—கொச்சித் தமிழர்கள் தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டுமென்று அமைதியான முறையில் கிளர்ச்சி நடத்தியதை இம்மாநாடு மிக மிக பாராட்டுவதுடன் அந்த அறப்போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களை சுட்டு வீழ்த்தியும் சிறையில் அடைத்தும் கொடுமை செய்த பட்டம் தாணு சர்க்காரின் போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் சிறை தண்டனை அனுபவித்துவரும் அறப்போர் வீரர்களையும் வழக்குத் தொடுத்துள்ள நூற்றுக் கணக்கானவர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்து வழக்குகளையும் வாபஸ் பெறுமாறு திரு—கொச்சி சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

(ஆ) பல கட்சிக் கொள்கைகள் கொண்ட ஆந்திர மக்கள் ஆந்திர மாநிலம் சென்னையிலிருந்து பிரிய வேண்டுமென்று டெல்லி மத்திய ஆட்சி பீடத்தினருக்கு நினைவூட்டி தெளிவுபடுத்தி பிரிந்ததுபோல, தமிழக மக்கள் தங்களது பல அரசியல் கட்சிகள் ஒருமித்த குரலான மொழிவழி மாநில பிரிவினையை மாநில புனரமைப்புக் குழுவினரிடம் அறிவித்துள்ளதை டெல்லி மத்திய ஆட்சியினரும், அகில இந்திய காங்கிரஸ் குழுவினரும் மேலும் காலதாமதம் செய்யாமல் உடனடியாகத் தமிழக, கேரள, கன்னட, ஆந்திரப் பகுதிகளின் எல்லைகள் இன்னின்னவை என நிர்ணயிக்க வேண்டுமென டெல்லி ஆட்சியினரையும் அதனின் மறைமுக சக்தியான காங்கிரஸ் கட்சியினரையும் இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—மேட்டுப்பாளையம் சண்முகநாதன்
—இரா. நெடுஞ்செழியன்

ஏர்னஸ்ட் ஹெமிங்வே தொடர்ச்சி

Hills of Africa) அதன் பிறகு "உடையவனும் இல்லாதவனும்" (To have and Have not) என்பது. இவைப் பற்றிப்பலருடைய கருத்துக்கள் பலவிதமாக வெளி வந்தன.

யாருக்காக மணியோசை?

1940-ல் For whom the Bell Tolls என்ற நாவல் ஹெமிங்வே மாரித்தாவுக்குத்தான் அளித்தார். இதனுடைய முதற் பதிப்பு 75000 காப்பிகள் போடப்பட்டிருந்தது. ஹெமிங்வேயின் நாவல்களில் மிக்க புகழ் பெற்ற இக்கதை ஸ்பெயின் நாட்டின் உள் நாட்டுக் கலகத்தைப் பொறுத்தது. ஒரு நல்ல திரையுலகக் காட்சியாக இது வெளி வந்துள்ளது; வீரம், இரக்கம், கொடுமை, பயம், அன்பு. இவைகளின் கலப்புத்தான் இக்கதை. ஸ்பெயின் நாட்டின் உண்மையான அரசாங்கத்திற்காக போராடிய ஓர் வீரனை ராபர்ட் ஜோர்டன்தான் இக்கதையின் நாயகன். ஹெமிங்வேயின் சாதாரண வேதாந்த மனப்போக்குடைய நாயகர்களிடமிருந்து ஜோர்டன் விடைபெறுகிறான். ஜோர்டனுடைய கொள்கை பலமும் தத்துவ நம்பிக்கையும் அவனுடைய முயற்சியில் அவனுக்கு வெற்றியளிக்கிறது. இந்தக் காதல் கதையில் உண்மையிலேயே ஹெமிங்வே காலத்தையும் கருத்தையும் ஒப்புவதாகத் தெளிவுபடுத்துகிறார்.

1950-ல் அவர் வெளியிட்ட ஆற்றைக் கடந்து காட்டிற்கு உள்ளே (Across the River and in to the Trees) என்ற கதையை விமர்சகர்கள் மிக மோசமாக எழுதினார்கள். போர்முனையின் பலன்களை அடைந்த இக்கதையின் நாயகன் சாவின் வாசலிலே நின்றுகொண்டிருக்கிறான். 'சாவு'தான் இக்கதை. சாவின் வாசலிலே நின்றுகொண்டு அவன் சிந்தனை உலகிற்கு புகுந்து செல்கிறான், அங்கு காணக்கிடைக்கும் அரிய காட்சிகள்தான் இக்கதை. இந்த எண்ணக் குவியல்களுக்கிடையில் இக்கதையின் நாயகி நினைக்கிறாள். அவள் இருப்பதாகவே சொல்ல முடியாத அளவிற்கு மறைக்கப்படுகிறாள்.

'டொனல்ட் ஆடம்ஸ்' என்பவர் இக்கதையைப் பற்றி இங்ஙனம் கூறுகிறார். "என்னை மிக மிக வருந்தவைத்த கதை இதுதான். ஆனால் இக்கதையில் காணும் காதல் சாவு இவைகளின் இயல்பல்ல என்னை வருந்த வைப்பது. ஓர் புகழ் பெற்ற கதாசிரியனின் பேனா முனை துருபிடித்துவிட்டதே என்ற விந்தைதான். பத்து வருடங்களாக வீண் பொழுது போக்கிவிட்டு ஹெமிங்வே வெளியிட்ட இக்கதை இத்தரத்தை அடைந்தது' ஆனல்—

உலகத்தை வியப்புப் படுகிலே உலகத்தை சுற்றிக் காண்பிக்கும் உன்னத எழுத்தோவியம், *1952*-ல் வெளிவந்தது. அதுதான் 'கிழவனும் கடலும்' (The old man and the sea) என்பது. இருபத்தைந்து வருடத்திய அவருடைய இலக்கியக் கோட்டையின் ரத்தின சிங்காதனம்தான் இது. *1953*-ல் இந்த இலக்கிய படைப்பு 'புலிட்சர்' பரிசு பெற்றது. இப்பொழுது நோபில் பரிசு பெற்றிருக்கிறது.

அக்கதை, எப்படி பரிசு பெற்றது? உண்மையிலேயே பரிசு பெறுவதற்கு தகுதிவாய்ந்த அக்கதையின் சுருக்கம் அடுத்த இதழில் நீங்கள் படித்து இன்புறலாம்:

●

திராவிடன்

சந்தா விவரம்

ஆண்டு சந்தா	...	ரூ. 8	0	0
ஆறுமாதம்	...	ரூ. 4	0	0
வெளிநாடு				
ஆண்டு சந்தா	...	ரூ. 9	0	0
ஆறுமாதம்	...	ரூ. 4	8	0

"எர்னஸ்ட்டு ஹெமிங்வே"

(1954-ல் இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்ற அமெரிக்காவின் எழுத்தாளர் சிறப்பு)

இந்தியத் துணைக்கண்டத்தில் முதன் முதலாக நோபல் பரிசு இலக்கியத்தின் சார்பிலே பெற்ற பெருமை டாக்டர் ரவீந்திரநாத தாகூர், அவர்களையே சாரும். களிப்பூட்டும் கற்பனையும், கொள்கையின் நல்லெழுச்சியும் பெற்றுத் திகழும் நல்ல இலக்கியத்திற்குத் தான் நோபல் பரிசு பெறும் பெருமை கிட்டுகிறது. சுவிடிஷ் அக்காடமி ஆப் லிட்டரேச்சர் (Swedish Academy of Literature)

இதற்கு தகுதியென்று நினைக்கும் புத்தகத்திற்கு 'நோபல் பரிசு' என்ற பெயரிலே 1,65,000 ரூபாயும், சிறப்பினைக் காட்டும் ஓர் முத்திரையும் அதற்குரியவருக்கு அளிக்கிறது. இலக்கியத்திற்கு இதுவரையில் அமெரிக்காவிலே நால்வர் நோபல் பரிசு பெற்றுள்ளனர். எர்னஸ்ட் ஹெமிங்வே அமெரிக்காவின் சார்பிலே ஐந்தாவது முறையாக இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெறுபவராவார். "கிழவனும் கடலும்" (The old Man and theSea) என்ற இவருடைய நாவல் தான் இப்பரிசைப் பெறுகிறது.

ஹெமிங்வேயின் வாழ்க்கை வரலாறு

இவருடைய தந்தையார் ஒரு டாக்டர். இரண்டாண்டு சிறுவனுக்கு அவர் ஓர் தூண்டில் அளித்தார். பத்து வயதானதும் ஓர் துப்பாக்கியை தந்தார் தூண்டிலுடனே, துப்பாக்கியுடனே நிலைப்பற்ற கதைகள் இவர் புனைந்திருக்கிறார் என்று கூறுவதற்கில்லை. இவருக்கு 16 வயதானதும், வீட்டிற்கு சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிட்டார். ஆனால் திரும்பிவந்து 1917-ல் தனது 19-வது வயதில் உயர்நிலை பள்ளியில் தேர்வு பெற்றார். பள்ளிச் சிறுவனாக இருந்தபொழுது 'பள்ளிக்கூட இதழில்' ஆசிரியராக இருந்தார். கல்லூரியில் தன்னுடைய கல்வியை வளர்ப்பதற்கு பதிலாக கான்ஸாஸ் பட்டினத்தில் 'ஸ்டார்' என்ற தின இதழில் வேலைக்கமர்ந்தார். சிறிய வசனங்களை மிகமிக விறுவிறுப்பாக எழுதவேண்டும் என்பது இந்த பத்திரிகையின் கொள்கை. இதில் வேலைபார்த்ததினால் இவருடைய மொழியில் ஓர் பெரிய மாறுதல் ஏற்பட்டது. ஒருவரிடம் பத்திரிகைத் தொழிலின்றதபிறகு ரெட்கிராஸ் உறுப்பினராக இத்தாலிக்குச் சென்ற இவர் போர்முனைகளின் துயர் நிறைந்த நிலைகளைக் கண்டறிந்தார். ஓர் 'பாம்' விழுந்த காரணத்தினால் அவருக்கு 227 காயங்கள் ஏற்பட்டன முழங்கால்மூட்டு அலுமினியத்தால் மாற்றப்பட்டது. போர் முடிந்த பிறகு கனடாவின் ஸ்டார் பத்திரிகையின் ஆங்கில நாட்டுக் கட்டுரையாளன் என்ற நிலையில் பாரீசுக்குச் சென்றார். கிரேக்க நாடும், துருக்கியும் போர்முனையிலே சந்தித்த நிலைகுறித்தும், 1922ல் ஜினிவாவில் நடந்த உலகப் பொருளாதார மாநாட்டைக் "குறித்தும் தேன் சொட்டும் கட்டுரைகள் அவர் தன்னுடைய பத்திரிகைக்கு அனுப்பிவைத்தார்.

முன்னேற்ற வாதியும், பாசிசத்தின் விரோதியுமான ஹெமிங்வே 1923-ல் தன்னுடைய 25-வது வயதில் முஸோலினியைக் குறித்து இங்ஙனம் வரைந்தார். "ஆங்கில நாட்டின் மிகப் பெரிய துரோகி முஸோலினிதான், அவருடைய கடந்த கால சரித்திரத்தைத் திரும்பிப் பாருங்கள்...சிறிய கொள்கைகளை பெரிய வார்த்தைகளால் ஆடை அணிவித்து அலங்காரம் செய்யும் அவருடைய பேச்சு கவனிக்கத்தக்கது..."

பத்திரிகை தொழிலல்ல, இலக்கியம் தான் தன்னுடைய வாழ்க்கையின்மிகப் பெரிய பங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிறகு அவருக்குத் தோன்றியது. தன்னுடைய நண்பன் ஷெர்வுட் ஆடம்ஸ் என்பவருக்கு அவர் எழுதினார் "இந்தப் பத்திரிகைத் தொழில் என்னை அழிக்கிறது. பொருள் தேடலாம் என்பது மட்டும்தான் பத்திரிகைகளுக்கு எழுதுவதால் ஏற்படும் லாபம்."

இந்த காலத்தில்தான் அவர் பாரீஸ் இலக்கிய மேதைகளான "கர்ட்ருட் ஸ்டெயின்." "எஸ்ரு பவுண்ட்" இவர்களுடன் நட்புறவு கொண்டார். இவர்கள் ஹெமிங்வேயின் இலக்கிய விருப்பத்தைப் பயிராக்கியதுடன் 'சிந்திக்கும் தரத்திலே சில மாற்றங்களும் ஏற்படுத்தினர்.

1928-முதல் 38 வரையில் மீன்பிடிப்பது, வேட்டைக்குச் செல்வது போன்ற மனதிற்குகந்த இன்ப விளையாட்டுகளுடன் இயற்கையின் எழிலைக் கண்டு மகிழ்ந்து, தொல்லைகள் தவிர்க்கப்பட்ட வாழ்க்கை நடத்தினார் மீன் பிடிப்பதிலே இன்னும் அவர் விருப்பம் காட்டுகிறார். அது மட்டுமல்ல. ஓர் புதிய ரசத்தைச் சார்ந்தமீன் "ஹெமிங்வே" என்ற அவருடைய பெயரில் புகழ்பெற்றிருக்கிறது. சில பல மியூசியங்களுக்கு இவர் பல ரசத்தைச் சார்ந்த, இதுவரை கண்டிராத மீன்களை அனுப்பி வைத்திருக்கிறார்.

டி. புருடோத்தமன், சென்னை

இதற்கிடையில் பல சிறு கதைகளும் புத்தகங்களும் அவர் இயற்றினார். புத்தகம் எழுதுவதற்கிடையில் ஆங்கில நாடுகளுக்குச் சென்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த சில்லரைப் போர்கள், அரசியல் தகராறுகள் போன்றவைகளைப் பற்றி பத்திரிகைகளுக்குப் படம் பிடித்துக் காட்டும் பல கட்டுரைகள் தீட்டினார். ஸ்பெயின் நாட்டிலே நடைபெற்ற உள்நாட்டுப் போர்பற்றிய பல நல்ல கட்டுரைகள் அவர் தீட்டியிருக்கிறார். முன்னால் பன்னிரண்டு வருடங்கள் அவர் ஸ்பெயினில் வசித்த காரணத்தினால் இவருக்கு இந்த விஷயத்தில் அலாதியான விருப்பமிருந்தது.

ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுப் போர் நிகழ்ந்த காலத்தில் இவர் 'மார்த்த கெல் ஹான்' என்ற பெண்ணுடன் காதல் கொண்டார். இவர் தீட்டிய ஒரே ஒரு நாடகத்தின் பெண் பாத்திரம் கெல் ஹானின் உருவத்தை எடுத்துக் காட்டுகிறதாம். தன்னுடைய இரண்டாவது மனைவியிடமிருந்து விவாகரத்து கிடைத்த பிறகு இவர் கெல்ஹானை மணந்து கொண்டார்.

இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருக்கும்போது இவர் மீண்டும் ஆங்கில நாட்டிற்குச் சென்றார். திரும்பவும் போர்முனைக்குச்சென்றார். ஓர் கால் உடைந்து காயங்கள் நன்னிலை அடைவதற்கு முன்னால் இவர் திரும்பவும் நேச கட்சிகளின் படைகளுடன் கலந்து பிரான்ஸின் போர்முனைக்குச் சென்றார். ஓர் பிரஞ்சு நாட்டு கொரில்லாப் படையின் தலைவன் என்ற முறையில் பாரீஸ் சென்றார். அவருடைய நல்ல தியாகங்களை மதித்து நேச நாடுகளின் வகுப்பு அவருக்கு ஓர் மதிப்புமுத்திரை தந்தது.

"சாவின் வாசலில்"...

மிஸ் கெல்ஹானுடன் அவருடைய மணவாழ்க்கை நீடிக்கவில்லை. அதன் பிறகு 1946-ல் மேரி வெல்ஸ் என்ற (பத்திரிகைத் தொழிலை மேற்கொண்டவர்) மற்றொரு மாதை அவர் துணைவியராக ஏற்றுக் கொண்டார் இவருக்கு மூன்று ஆண் குழந்தைகள் உண்டு. இன்று அவருக்கு 56 வயதாகிறது. ஆனாலும் உறுதியான உடல்வளம் படைத்தவராகத்தானிருக்கிறார்.

ஆப்ரிக்காவிலிருந்து அவரும் அவருடைய மனைவியும் விமானத்தில் செல்லும்பொழுது ஒரு கூட்டம் பறவைகள் —(அவையால் விமானத்தை தூள் தூளாக்க முடியுமாம்)—இவருடைய விமானத்திற்கு முன்னால் தோன்றின. திடீரென்று விமானத்தை திருப்பிவிட்டார் விமானம் உடைந்து காட்டு யானைகள் கூட்டமொன்றின் முன்னே விழுந்தது. இதைப் பார்த்த மற்றொரு விமானம் இச்செய்தியை வெளியிட்டது. உலகத்தின் பல பகுதிகளில் பத்திரிகையாளர்கள் இவருடைய வரலாற்றை எழுதுவதற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டு இவருடைய திடீர் சாவிற்கு அனுதாபக் கட்டுரைகளும் எழுதிவைத்துக் கொண்டனர். ஆனால்—

அவர்கள், கணவனும் மனைவியும் நாடு திரும்பினர். எந்தவிதமான ஆபத்தும் இல்லை. சில காலத்திற்குப் பிறகு அவர்கள் ஏறிச் செல்வதற்கிருந்த மற்றொரு விமானம் இவர்களுடன் தரையிலிருந்து கிளம்பி சற்று தூரம் செல்வதற்குமுன் எரிந்து சாம்பலாயிற்று. இப்பொழுதும் அவர்கள் தப்பிவிட்டனர். கடைசியில் தங்களுடைய தங்குமிடம் வந்த பிறகு அவர் கிண்டலாகக் கூறினாராம்: 'புத்தகங்களுடைய செலவை அதிகப்படுத்துவதற்குத்தான் இப்படியெல்லாம் செய்தேன் என்று தயவு செய்து நினைக்க வேண்டாம்!'

அமெரிக்காவில், கியூபாவில்—ஹவானா என்ற பட்டணத்திற்கு சற்று அருகாமையில் ஓர் வயல்கள் நிறைந்த கிராமத்தில் அவர் வாழ்கிறார், அவர் தன்னுடைய இல்லத்தில் 50 பூனைகளை வளர்க்கிறாராம்.' தனக்கென்று தயாரிக்கப்பட்ட ஓர் படகில் கடலில் மிகமிக தூரத்திற்குச் சென்று மீன் பிடித்துத் திரும்புகிறாராம்.

சில நாட்களுக்குமுன்னால் பத்திரிகை நிருபர்கள் அவரை இவ்விடத்திற்குச் சென்று பேட்டி கண்டபொழுது அவர் கூறினாராம், "நோபில் பரிசு கிடைத்ததில் நான் மகிழ்வதுடன் பெருமையும் கொள்கிறேன் ஆனால் ஆப்பரிக்காவிலிருந்து திரும்பும்பொழுது ஏற்பட்ட விமான அபாயத்தினால் அடைந்த காயங்கள் இன்னும் சரிவர நன்னிலை அடையாத காரணத்தினால் டிசம்பர் மாதத்தில் 'ஸ்டாக்ஹோம்' சென்று ஸ்வீடனின் 'குஸ்டாவ்' மன்னனிடமிருந்து பரிசை நேரடியாக பெறுவதற்கு இயலாதமைக்கு வருந்துகிறேன்.

இவருடைய வாழ்க்கையும் கதைகளும் மிகமிகத் தொடர்புடையவை. ஆதலின் பத்திரிகையில் இவருடைய புத்தகங்களைப் பற்றிய கருத்துக்கள் வெளிவரும் பொழுது இவருடைய வாழ்க்கையைக் குறித்தும் அவர்கள் சந்தேகங்கள் வெளியிட்டனர். ஆனால் இவர் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை. இவர் கூறுகிறார். 'உண்மையைக் கூறுவதுதான் எழுத்தாளனின் கடமை. வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்து மட்டும் வெளிவரும் கற்பனைகள், நடக்கலாம் என்பதைவிட உண்மை என்ற நிலைமைக்கு உயர்ந்திருக்க வேண்டும். ஓர் எழுத்தாளனின் உண்மை அதில் தான் நிலைகொள்கிறது''

ஹெமிங்வே உண்மையை விரும்புபவர். அவருடைய அனுபவங்களுக்கு 'கலை' என்ற மெருகிட்டு இடம், காலம் நிலை இவைகளை நன்குணர்ந்து கதைகள் புனைந்தெழுதுகிறார். உண்மையின் உவகை அலைமோதும் அந்த நல்லஎழுத்தோவியங்கள் இம்மைக்கு உதவும் விதத்தை மட்டும் குறிப்பிடுபவை.

இலக்கிய உலகில்...

இத்தாலியில் போர் முனைக்குச் சென்று நேரடிய அனுபவங்களின் கூட்டுக் கதைதான்—Fare well to Arms என்பது. இவருடைய இருபத்தி நான்காவது வயதில் மூன்று சிறுகதைகளும் பத்து செய்யுட்களும் இணைந்த ஓர் புத்தகத்தை இவர் வெளியிட்டார். அதன் பிறகு "நம் காலத்தில்" (In our times) என்ற புத்தகம் வெளியிட்டார். அதற்குள் திறமைமிக்க இலக்கிய மேதை என்ற புகழை அவர் அடைந்திருந்தார், இருபத்தி எட்டாம் வயதில் வெளியிட்ட "சூரியனும் உதிக்கிறான்!" (The Sun also Rises) என்பதுதான் இவருக்கு நல்ல புகழைத் தேடித்தந்த முதல் புத்தகம். துயரத்தில் மூழ்கியெழும் மனித இதயத்தின் பேரொலியை இவர் இக்கதையில் ஓவியம் போல் புனைந்து காண்பிக்கிறார். தன்னுடைய முதற் கணவனிடமிருந்து திருமண ரத்து கிடைத்த பிறகு கதாநாயகி தன்னுடைய காதலனுக்காக ஏங்கிக் கிடக்கிறாள். இதற்கிடையில் ஒரே வேளையில் வேறு மூன்று பேர்களுடன் அவள் காதலிலீடுபடுகிறாள். கதையின் கடைசியிலும் அவள் காதலனின் வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடக்கும் காரிகையாகக் காட்சியளிக்கிறாள். இதை போன்ற மிகப்பல கதாபாத்திரங்களை இதற்குப் பிறகும் அவர் உண்டுபண்ணியிருக்கிறார்.

அதற்கடுத்த வருடத்தில் பெண்களில்லாத ஆண்கள் (Men without women) என்ற சிறுகதைகள்கொண்ட புத்தகம் வெளிவந்தது. ஆனால் 1929-ல் வெளியிடப்பட்ட Fare well to Arms என்னும் புத்தகம் அவரை உலகம் ஒப்புக்கொள்ளச்செய்தது. போரை விரும்பாத மனநிலையும், கொள்கையின்கண் அடங்காத ஆவலும் கொண்ட எண்ணக் குவியல்கள் தான் இக்கதை.

இக் கதையில் இத்தாலியின் பாதுகாப்புப் படையைச் சார்ந்த 'ஹென்ரி' என்பவர் 'காதரின்' என்னும் மாதிடம் காதல் கொள்கிறார். ஹென்றி போர்க்களத்தில் காயமுறுகிறார். காதரின் அவரை அன்புடன் கவனித்துக் கொள்கிறாள். அதற்குள் படைகள் பின் வாங்கிவிட்டன. ஹென்றி படையை விட்டு ஓடிப்போய்விடுகிறான். ஹென்றியும் காதரினும் ஸ்விஸர்லாந்தில் சந்திக்கிறார்கள். அன்புடனியைந்த இன்ப வாழ்க்கையின் இன்பத்திலே புதுமைப் படகில் பயணம் புரிகின்றனர். அவர்களுடைய வாழ்க்கைப் பயணத்தின் அத்தாட்சியைப் போல மழலை மொழியும் மகவொன்று பிறக்கிறது. ஆனால் அந்தப்பிறப்பு 'தாய் சேய்' இவர்களுடைய இறப்பில் முடிகிறது. துன்பம்! எங்கும் இருள் கவ்வுகிறது. 'உலகே மாயம்' என்ற வேதாந்த மனப்பான்மை கொண்ட, ஹெமிங்வேயின் எண்ணக் குவியல்கள், நாயகனின் உள்ளக் கிடக்கையாக ஒளிருகிறது. இதுதான் அந்தக்கதை: கதாசிரியனின் வாழ்க்கை வரலாற்றின் சில பல பகுதிகள் இக் கதையில் இடம்பெற்றுள்ளதாம்

ஸ்பெயின் நாட்டவருடைய புதுமை விளையாட்டான 'எருதுகொல்' நினைவில் நிறுத்தி நாவல் ஒன்று வரைந்துள்ளார் 1934-ல் கொடிய விலங்கினங்களை வேட்டையாட இவர் ஆப்பிரிக்கா சென்றார், இங்கு கிடைத்த அநுபவங்களை வைத்து கொண்டு எழுதியதுதான் 'ஆப்ரிக்காவின் பச்சைக் குன்றுகள்' (Green

7-ம் பக்கம் பார்க்க

திறந்த மடல்

தேபாரின் உபதேசத் துவக்கம்

தோழர் யூ. என். தேபார் அவர்கள்
வழிநிலை, ஆவடி

அனைத்திந்தியக் காங்கிரசின் புதிய தலைவரே, வணக்கம். தாங்கள் தமிழகத்தின் எல்லையை வந்தடைந்ததும், அரக்கோணம் ரயிலடியில் அவ்வூர் காங்கிரஸ் கமிட்டியினர், காலைச் சிற்றுண்டி (இட்டிலி சாம்பார், மிளகாய்ப் பொடி) அளித்து மகிழ்வித்துப் பின்னர், தென்னாட்டு உணவு எப்படி யிருக்கிறது என்றும் தங்களைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குத் தாங்கள் பதிலளிக்கையில் 'எனக்கு இந்தியா பூராவும் ஒரே நாடாகவே தெரிகிறது' அந்த கண்ணோட்டம் கொண்டே எல்லாவற்றையும் நோக்குவேன்; அதுபோலவே எல்லா காங்கிரஸ்காரர்களின் எண்ணமும் செயலும் இருக்க வேண்டும். தென்னாடு வடநாடு என்ற பேதாபேதத்தை நினைக்கவும் கூடாது' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

உங்களைப் போன்றவர்களிடத்திலிருந்து இதைவிட வேறு நேர்மையான பதிலைத் தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்கள் எதிர்பார்க்கவும் முடியாதென்பதை யான் அறிவேன். தாங்கள் இந்தியா முழுமைக்கும் ஒரேநாடு என்ற உறுதிப்பாடு வளர வேண்டும் என்று கூறிவிட்டதாலேயே தென்னாட்டு மக்களுக்கு தக்க உபதேசம் செய்து விட்டதாக எண்ணிவிடாதீர்கள்.

உங்கள் மீது 'தலைவர்' என்ற பொறுப்பை ஏற்றி வைத்து சுமக்கச் செய்துள்ள ஆதிக்கக்காரர்கள் சொல்லிக் கொடுத்த பாடத்தை சரியாக ஒப்பிக்கப்பழகி யிருக்கிறீர்கள் என்பதைத் தவிர உமது உபதேசத்தில் ஒன்றும் புதுமையில்லை.

முதல் கோணல், முற்றுங் கோணல் என்பார்கள்; அதற்கேற்ப தமிழகத்தின் எல்லையை மிதித்ததும் முதன் முதலாக வாயைத் திறந்து பேசிய பேச்சே தென்னாட்டு மக்களின் பிறப்புரிமையை நையாண்டி செய்யும் முறையில் காணக் கிடக்கிறது. இன்னும் ஆவடி மாநாட்டில் என்னென்ன பேசுவீரோ அறியேன்.

அன்புள்ள
கூத்தரசன்

மந்திரி சுப்ரமண்யத்திற்கு மூளை குழப்பம்?

தோழர் சி. சுப்ரமண்யம் அவர்கள்
சென்னை

கல்வி அமைச்சரே, வணக்கம். தாங்கள் சென்ற வாரம் ஆசிரியர் மாநாட்டில் பேசிய விவரங்களைத் தினஇதழ்கள் வாயிலாக அறிந்தேன். அப்பேச்சுக்களில் அடங்கிய ஒரு குறிப்பைக் கண்டு திடுக்கிட்டேன். 'கல்விப் பிரச்னையைக் குறித்து எண்ணும் போதெல்லாம் எனது மூளை குழம்பி விடுகிறது. இது ஏன் என்று புரியவில்லை,' என்று பேசியிருக்கிறீர். உங்களுக்கு மூளை குழப்பம் ஏற்படுவதற்கான காரணத்தைக் கண்டறிய அதிக சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டாம். அந்தக் காரணத்தை யான் கூறுகிறேன்.

தங்களின் அரசியல் குரு என்று கூறப்படும் ஆச்சாரியார் கல்விப் பிரச்னையில் கொண்டுள்ள வடிகட்டிய பத்தாம் பசலிப் போக்குக்கு குனிந்து கொடுக்க வேண்டும் என்ற மட்டமான எண்ணம் தங்கள் மனதிலே ஊசலாடி வருவதால், தங்களின் மூளையும் குழம்பி விடுகிறது!

எனவே அந்த கோணங்கித் தனத்தை விட்டு, கல்வி நிபுணர்கள் கூறும் அறிவுரைகளை ஆக்கத் திட்டத்தை ஆர அமர சிந்தித்து புத்தியில் பதிய வைத்துக் கொள்ள முயன்றால் தங்களின் மூளை குழப்பம் அறவே அழிந்துபடும்.

தங்களுக்கும் எனக்கும் அரசியல் துறையிலே அபிப்பிராய பேதமிருப்பினும் தனிப்பட்ட முறையிலே தங்களிடம் எனக்கு வெறுப்பு கிடையாது. ஆதலாலேதான் தங்களை எக்காரணம் முன்னிட்டும் மூளை குழப்பம் போன்ற ஆபத்தான வியாதி பீடிக்கக் கூடாதென்ற எண்ணம் கொண்டே இதனை எழுதுகிறேன், தவறாகக் கருதிவிட வேண்டாம், சிரமம் மன்னிக்கவும்.

அன்புள்ள
கூத்தரசன்

அவளே குப்பி!

மு. அருச்சுனன்

நிலவுலகில் புதுமையிலே அழகாய்ப்பூத்து
  நீலவான் கோட்டையிலே நிலவுப் பெண்ணாள்
வளம் நிறைத்தாள் ஆங்காங்கே இன்பக்காட்சி
  வனப்புலகில் களிப்பாட்சி மகிழ்வின் தோற்றம்
உளம் மகிழ்ந்தார் காதலர்கள் இன்பப்பண்ணை
  உரைக்கவெனில் தோற்றிடுவேன் வார்த்தையில்லை
பலநாளாய் பட்டினியால் வாழ்ந்தோன் முன்னம்
  பழக்கூடை—என்முன்னே நிலவின் தோற்றம்

தென்னை மரத்திடை தோன்றும் நிலவில்; நல்ல
  தெளிபுனலில்; எழில் நிழலின் காட்சி தன்னில்
புன்னைமர நிழலின் கீழ் வெண்பொற்காசு
  போட்டது போல் ஒளிதிகழ் நல்நிலவின் சாற்றில்
வண்ணமலர் சோலைகுளம் ஆற்றில் மேட்டில்
  வனப்போடு நின்றாடும் கடலலையிலெல்லாம்
நின்ற விழியால் களிப்பில் நின்றேன். எந்தன்
  நினைவென்பான் எனையழைத்தான் பறந்தேன் ஊருள்

காட்சிகளுக் களவில்லை உள்ள வானில்
  கலைக் கூத்தை நிகழ்த்தின நல்உலகத் தோற்றம்
ஆட்பட்டுக் கிடப்பாரின் ஏக்கம் வாழ்வால்
  ஆலை முதலாளியரின் இன்பம்; அன்பின்
கூட்டாட்சியால் உலவும் காதற் செல்வர்
  கொட்டுகின்ற சுவைப்பேச்சு; உளம் மலர்ந்து
பாட்டாக வெளிப்படும் நல் இன்பச்சாறு
  பரவசத்தை கொட்டிற்று என் நெஞ்சத்து-

கூடிசெலும் மேகத்தில் நிலவுச் செல்வி
  குறையாத அழகுடை நற்பூவின் பந்தர்
ஓடிசென் றொளிகின்றாள் உன்னால் நங்காய்
  ஒளிவிளக்கே இன்னமுதே வாவா என்றே
வாடாத பூப்போன்றாள் தனை அழைத்து
  வனப்புடையோர் இளங்காளை இன்பம் தின்றான்
தேடி சென்ற புதையலல்ல—வழியில் ஏதோ
  தென்பட்ட காட்சி இதைஎல்லாம் தாண்டி

ஆரியர்வாழ் சேரியொன்று தெருவுள் எந்தன்
  அடிபரப்பி நெடுவழியும் தாண்டும் போழ்து
ஓர்மனிதர் சிரிப்பொலிக் கென்காது சாய்த்தேன்
  உளம் தளர்ந்தேன் பழம்வேத சாஸ்திரத்தால்
ஊர்மக்கள் பணத்தையெலாம் கோயில் பேரால்
  உண்டின்பம் கண்டுவகைக் காட்டில் வாழும்
நேர்மைக்குப் பகையானன் பழமை கூறி
  நீள்புவியை மிடிமையிலே ஆழ்த்தும் தீயன்

இன்பமுறும் கோயில்குரு சீனுவய்யர்
  இதயத்தால் மகிழ்ந்தபடி மனைவியின்பால்
அன்றையநாள் அருச்சனையால் கிடைத்த ரூபாய்
  அரிசி, பழம், பால், தயிர், நெய், பருப்பு, தேங்காய்
இன்னவை யெலாம்தந்து நம்மகோபுக்
  கிம்மாதம் சம்பளத்திற்கென்ன செய்வ
தென்றிருந்தேன்—இன்றொருவன் கோயில் வந்தான்
  என் நினைவு நிறைவடைய பூசைசெய்தான்

அருச்சனையால் நிறைய பணம்வரும் நாளைக்கும்
  அவன்தான் இவ்வூர் கோடி வீட்டுக்காரன்
முருகனென்பான் பெருஞ் செலவில் பூசையொன்று
  முடித்திடுமா றென்பால் இன்றியம்பிச் சென்றான்
உருப்படியாய்ப் பணமாக இருபத்தைந்தும்
  உள்ளபடி மற்றவெலாம் வழக்கம்போல
தருவான் நல்சேலை யொன்று வாங்கலாம் பின்
  தக்கபடி பிறசெலவும் செய்ய வொண்ணும்

எனமகிழ்ந்தபடி இவர்கள் இருந்தார் ஆனால்
  இவர்மகிழக் காரணனும் முருகன் ஆங்கே
தனதில்லில் இரவுணவாய்க் கரைத்த கூழை
  தன்மெலிந்த எலும்புடலில் ஊற்றிக் கொண்டு
பணம்வேண்டுமே மச்சான் நாளை நம்மூர்
  பண்ணையார் கழனியிலே விலைக்கு சோளம்
பணம் போட்டால் கிடைக்குமாம் கூழ்ம்காய்ச்ச
  பானையிலே ஓர் பிடியும் சோளமில்லை

மடத்தனமாய் உளராதே குப்பி நாளை
  மகேஸ்வர பூசையொன்று 'சிவன்' கோயிட்கு
நடத்துவதாய் குருக்களிடம் இன்று மாலை
  நான் சொன்னேன் நேற்றிரவு சொப்பனத்தில்
வடக்கிருந்து ஆண்டியைப்போல் நீரணிந்து
  வந்தஓர் பரதேசி எனை விளித்து
படையலை நீ தரவில்லையா? என்றே கேட்டார்
  பயந்துவிட்டேன் சிவன்தாண்டிக் கனவில் வந்தார்

எது எவ்வாறானாலும் பரவாயில்லை
  இறைவன்மனம் கோணாது நாம் நடந்தால்
அதுபோதும் நாளைதான் "சோம வாரம்"
  அஃதே நம் சிவனுக்கு உகந்தநாளாம்
புதுவேட்டி பையனுக்கு, உனக்கு வீட்டு
  பொருட்கெல்லாம் பணமில்லை பூசை செய்ய
முதலாக முப்பத்தைந்துண்டு எல்லாம்
  முடியட்டும் 'சாமி செயல்' மறைத்தால் குற்றம்

என இருந்தான் என்னே நம் தமிழன் எண்ணம்
  இழிமுறையால் மனமுழன்று வதையும் காட்சி
பணம் கொடுத்து ஆரியனின் பிள்ளை பள்ளிப்
  படிப்புக்கும், பார்ப்பனத்தி உளம் மகிழ்ந்து
வனப்புமிகும் சேலை பெற வகை செய்வித்து
  வாழ்வளித்து வறுமையிலே தன்வாழ்விட்டு
மனமற்று மானமற்று வாழ்வார் இந்த
  மாண்பு தமிழகத்தவன்போல் இன்னும் யாரோ

என்றெண்ணி ஒருவாறாய்த் துயிலச் சென்றேன்
  இவை நடந்து ஓரிரண்டு நாளின் பின்னர்
வண்ண நிறப் பொன்னுடலாள் குருக்கள் இல்லாள்
  வனப்புமிகும் எழிலுடையாள் அழகுமிக்கு
என்தெருவைக் கடந்தெங்கோ சென்றிருந்தாள்
  இவள் சென்று அடுத்து சில நிமிடத்திற்குள்
கண் குழிந்து கவினிழந்த கிழிந்த ஆடை
  கட்டிய ஓர் பெண்சென்றாள் அவளே குப்பி!

சென்னை 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகம்

25-1-55 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு கழக சார்பில், பெத்து நாய்க்கன் பேட்டை, காசிவிசுவநாதர் கோயில் திடலில் மு. ப. புட்பரத்தினம் தலைமையில், பொங்கல் விழா பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் என். வி. நடராசன், காஞ்சி கலியாணசுந்தரம், கவிஞர் கண்ணதாசன், சி. ஆர். பாலசுந்தரம், டி. எம். முத்துவேலு ஆகியோர் பேசுவர்.

கோவை திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் ஆலோசனை கூட்டம்

26-1-55 காலை 9-மணிக்கு கோவை தியாகராயர் படிப்பகத்தில் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் தோழர் மதுரை முத்து, எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆகியோர் கலந்து கொள்வர். எனவே கம்போடியா மில், காட்டன் மில், லஷ்மி மில், பங்கஜா மில், விஜயலஷ்மிமில், முருகன் மில், காளீஸ்வரா மில், ஸ்டேன்ஸ் மில், சோமசுந்தரா மில், ஆகிய அத்தனை மில் தோழர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாறு அமைப்பாளர் தோழர் இரா. சுந்தரம் தெரிவித்துக் கொள்கிறார்.

பொங்கல் மலர்

திராவிடன் பொங்கல் மலர்—மேலும் தேவைப் படுகிறது. உடனே அனுப்பித்தரவும் என்று கடிதம் எழுதிவரும் ஏஜெண்டு தோழர்களின் எண்ணத்தை நிறைவேற்ற முடியாத நிலையிலிருக்கிறோம். மலர் கைவசமில்லை. எனவே மடல் தீட்டியுள்ள தோழர்கள் மன்னிக்க வேண்டுகிறோம்.

●

வாசகர்களுக்கு

திராவிடர் திருநாளை முன்னிட்டுத் தொடர்ந்து நான்கு நாட்கள் நமது அலுவலகத் தோழர்களுக்கு விடுமுறையளித்திருந்ததால், இவ்வாரம் 12-பக்கங்களாக வெளியிட நேர்ந்தமைக்கு பொறுத்தருள வேண்டுகிறோம். அடுத்த வாரத்திலிருந்து தொடர்ந்து 14-பக்கங்களுடனும் மற்ற சிறப்புக் கட்டுரைகள் கேள்வி—பதில் முதலியனவும் வெளி வரும்.

—நிர்வாகி—'திராவிடன்'

கழகச் செய்திகள்

அந்தேரி தி. மு. கழகம்

1—1—55 சனிக்கிழமை மாலை 5—30 மணிக்கு அந்தேரி தி. மு. க. உறுப்பினர் கூட்டம் எ. இ. கே. யாக்குப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் தோழர் எல், எம், பாண்டியன் கூட்டத்தை துவக்கி வைத்து சென்னை அரசியலார் கொண்டுவந்திருக்கும் நாடக சட்ட மசோதா நாட்டுக்கும், மக்களுக்கும் செய்யும் தீங்குகளைப் பற்றி பேசினார். பின்னர் துரைராஜ் திராவிடப் பண் பாடினார். தலைவர் தலைமையுரைக்குப் பின் எஸ். கணேசன், இரா. தஞ்சைத்துரை ஆகியோர் சென்னை அரசாங்கம் செல்லும் பிற்போக்குப் பாதையையும் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நாடக சட்ட மசோதாவை கண்டித்தும் பேசினர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

1. (அ) சென்னை அரசியலார் கொண்டுவந்திருக்கும் புதிய நாடக சட்டமசோதாவை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதோடு உடனே இந்த கலைக்குதவா திட்டத்தை கைவிடுமாறு சென்னை அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

(ஆ) அறிஞர் அண்ணா அவர்களின் மைத்துனர் தோழர் அரங்கநாதன்; அவர்கள் மறைவுக்கு இக்கூட்டம் வருந்துவதோடு அவர் பிரிவால் துயர்படும் அவர்கள் குடும்பத்தாருக்கும் அனுதாபம் தெரிவிக்கிறது.

தலைவர் முடிவுரைக்குப் பின் துணைச் செயலாளர் தோழர் ஈ. முத்தையா அவர்கள் நன்றி நவில கூட்டம் இரவு 7-மணிக்கு இனிது முடிந்தது.

சபாநாயகர் சிவசண்முகனுருக்கு பம்பாயில் மகத்தான வரவேற்பு

பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜனசங்க சார்பில் சென்னை சட்டமன்றத்தலைவர் திரு. ஜே. சிவசண்முகனுருக்கு ஒரு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

10—1—55 மாலை சயான் புகைவண்டி நிலயத்திலிருந்து நூற்றுக் கணக்கான சிறுமிகள் அணிவகுத்தும், ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மகிழ்ச்சிப் பொங்கிய ஒலியுடனும், 56—இளைஞர்கள் சைகில்களில் புடைசூழ்ந்தும் வர, நான்கு வெண்புரவிகள் பூட்டிய சாரட்டில் திரு. சிவசண்முகனுரை வைத்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டது.

அன்று இரவு 7-மணிக்கு தாராவில் ஓர் பெருங்கூட்டம் நடைபெற்றது. வெள்ளம்போல் மக்கள் கூட்டம் வந்திருந்தது. கௌரவச் செயலாளர் ந. ஐ. அப்பையா அவர்கள் வரவேற்புரைக் கூறினார். பம்பாய்த் தமிழர் சங்கத் தலைவர் திரு. மே. வே. துரைசாமி அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

சமுதாயக்கல்வி, கலாச்சார, பொருளாதார சங்கங்களான மொத்தம் 73 ஸ்தாபனங்களின் சார்பில் அளிக்கப்பட்ட மணமாலைகள் குன்றுப்போல் குவிந்தன.

வரவேற்புக்கும், வாசித்தளிக்கப்பட்ட வரவேற்பு இதழ்களுக்கும் நன்றி கூறுகையில் தாழ்வு மனப்பான்மையிலும், பிறரைவெறுக்கும் தத்துவார்த்தங்களிலும் மக்கள் நேரத்தை செலவழித்தல் கூடாதென்றும் ஆக்கமானத் துறைகளில் ஊக்கமாக நாட்டு நலன்களில் அக்கரையுடன் செயல்படவேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கினார்.

பம்பாய்—தாரு தி. மு. கழகம்

25—12—54 அன்று மாலை 5 மணிக்கு பெஞ்சியமேன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் புத்தாண்டு நிர்வாகிகளாக வைதீகசங்காரன் செயலாளராகவும், எம். இராசகோபால் துணைச்செயலாளராகவும், எஸ். வி. மலை பொருளாளராகவும், வைதீகசங்காரன், ஆர். நம்பி நாராயணன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், பி. மாடசாமி ஆர். நம்பிநாராயணன். கே.எம்.பாண்டியன், சி.எல்.பதி, செல்லப்பெருமாள், வி. நம்பி, கிருஷ்ணன், எல். என். சாமி, நெல்லைவாணன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆமதாபாத் சமால்பூர் வட்ட தி. மு. கழகம்

செயலாளர் பொ. ரத்தின வேலன் அவர்கள், 14-1-55ல் தாயகம் போயிருப்பதால் அவரின் பொறுப்பை என்னிடம் கொடுத்துள்ளார். இனி அவர் வந்து பதவி ஏற்கும் வரை எல்லா கடிதப் போக்குவரத்தும் 6—1—55ல் இருந்து முகவரியில் செயலாளர் பொ இரத்தின வேலன் என்பதை மாற்றி பொறுப்பாளர் டி. பி. பாலகிருட்டினன் என மாற்றி எழுதுமாறு இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்கு (ஆமதாபாத்) அனாதையாக வந்து பெரிதும் கவலைக்கிடமாய் பிழைப்பற்று வாடிய நம் தமிழக குடும்பம் ஒன்றுக்கு பலரிடம் சேமித்த ரூ. 8-1-9 யை சி. ஜி. கண்ணன் அவர்கள் அக்குடும்பத்தார்க்கு ஈந்து உதவியமைக்கு அத் தோழரை பாராட்டுகிறோம்.

அன்பன், டி. பி. பாலகிருட்டிணன்.
பொறுப்பாளர், ஆமதாபாத், சமால்பூர் வட்ட தி. மு. கழகம்

கொலாபா தி. மு. க.

கொலாபா தி. மு. க. மாதாந்திரக் கூட்டம் 3—1—55 அன்று கூப்ரேஜ திடலில் எஸ். பி. பெருமாள் தலைமையில், நடைபெற்றது. மூன்று மாதக் கணக்குகளை சரிபார்க்கப்பட்டு, கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

சென்னை அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் நாடக தடைமசோதா வளர்ந்து வரும் மறுமலர்ச்சியை தடைபடுத்துவதாயும், பகுத்தறிவு கொள்கையை அழிக்கும் நோக்கத்தில் இருப்பதாலும் அந்த மசோதாவை உடனே கைவிடுமாறு சென்னை அரசாங்கத்தை இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களின் தாயார் இயற்கை யெய்தியமைக்கு இக்கூட்டம் அன்னார் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது.

கணியூர் தி. மு. க.

14—1—55 வெள்ளிக்கிழமை மாலை கணியூர் தி. மு. க. சார்பில் உடுமலை முனிசிபல் கவுன்சிலர் நாராயண சிங் அவர்கள் தலைமையில் பொங்கல் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ. 'கிளர்ச்சி' ஆசிரியர் இரா. சு. தங்கப்பழம், பழந்தமிழரசன் ஆகியோர் விழாப் பற்றியும் தற்கால அரசியல் பற்றியும் சுமார் மூன்றுமணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் நன்றி கூறியதும் கூட்டம் இனிது முடிவுற்றது.

திரிகோணமலை மறுமலர்ச்சி மன்றம்.

26—12—54 காலை 10 மணிக்கு மறுமலர்ச்சி மன்றப் படிப்பகத்தில் எம். இருஸ்னபலம் அவர்கள் தலைமையில் செயற்குழு உறுப்பினரும் முன்னணி வீரருமான ப. சுந்தரராசன் அவர்கள் தாயகம் செல்ல இருப்பதை முன்னிட்டு அன்னாருக்கு ஓர் பிரிவு உபசாரக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் இரா. சச்சிதானந்தன், கே. சிவகுரு, மு. அசன் வீ. நடர்ராசா, எம். சண்முகம், எம். யோசப், ஆ. புரட்சிப்பித்தன் ஆகியோர் அவர் மன்ற வளர்ச்சிக்காகச் செய்த பணியினைப் பாராட்டிப் பேசினர். பின் ப. சுந்தரராசன் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

பள்ளி திறப்பு விழா

10—1—55 தாராபுரம் தாலுகா காதக் கோட்டை என்ற ஊரில் கன்னிவாடி பஞ்சாயத்தின் சார்பில் கன்னிவாடி கிராமத்தலைவர் கே. எஸ், பெரியசாமி தலைமையில் பஞ்சாயத்து உறுப்பினர் என், குப்புசாமி அவர்களால் பள்ளியை ஆரம்பித்து வைக்கப்பட்டது அதுசமயம் கல்வியின் அவசியம் பற்றி சின்ன முத்துசாமி, கண்ணுசாமி, 'இன்பம்' ஆசிரியர் பொன்னப்பா முதலியோர் பேசினர். முடிவில் தலைவர் இப் படிப்பட்ட பள்ளிகள் திறப்பதை வரவேற்றும் கிராமத்து மக்கள் இந்த பள்ளிக்கூடத்தை நல்ல முறையில் பயன்படுத்தி கிராமப் பகுதிகளில் நிலவி வரும் அறியாமையை நீக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறினர். முடிவில் கன்னிவாடி பஞ்சாயத்து துணைத்தலைவர் கே. சி. ராமசாமி அவர்கள் எல்லோருக்கும் நன்றி கூறினர்.

மருதங்குடி பகுத்தறிவு நிலையம்

மருதங்குடி பகுத்தறிவு நிலைய 1955ம் ஆண்டின் முதற் செயற்குழுக் கூட்டம் இவ்வூர் காந்திப் பள்ளிக்கூடத்தில் 9—1—55 இரவு 8—30 மணிக்கு S. A. வேலன் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேர்பப் பட்டது.

தென்கரை தோழர் ஆ. பெரியசாமி அவர்கள் எழுதிய "நான் கண்ட புது வாழ்வு" என்னும் நாடகத்தை நடிகமணி திரு. எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் தலைமையில் நடத்துவது என்றும், சமீபத்தில் சென்னை அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் நாடகத் தடை சட்டத்தை இக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோபிப்பாளையம் சிங்காரவேலர் நினைவுப் படிப்பகம்

16—1—55 காலை 10 மணிக்கு மு. நடராசன் தலைமையில் பொங்கல்விழா நடைபெற்றது. சிறுவர் சிறுமியர்களுக்கு பொங்கலும் கரும்பும் கொடுக்கப்பட்டது. சோமநாதன் விழா குறித்து விளக்க உரை ஆற்றினர்.

பொங்கல் விழா 37 வது வட்ட தி. மு. க.

14—1—55 வெள்ளியன்று காலை 37—வது வட்ட தி. மு. கழகத்தில் கொடியேற்றி வைக்கப்பட்டது. எ. எல். சேசாமி தலைமையில் பொ. ஏழுமலை, கிருட்டிணமூர்த்தி ஞானசேகரன் ஆகியோர் பொங்கல்விழா நடத்துவதன் அவசியம் குறித்து சொற்பொழிவாற்றிய பின்னர் 300—க்கு மேற்பட்ட ஏழை மக்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. செயலாளர் கோ. இளவரசு நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

43 வது வட்ட தி. மு. க.

14—1—55 வெள்ளியன்று காலை 43—வது வட்ட கழக பணி மனையில் செயலாளரால் கொடியேற்றி வைக்கப்பட்டது. தோழர் இ. மணி தலைமையில் விழாவின் முக்கியத்துவம் பற்றி பலர் சொற்பொழிவாற்றிய பின்னர் கழகத் தோழர்களுக்கு தேநீர் விருந்து ஒன்றும் நடைபெற்றது, பிற்பகல் 1 மணிக்கு 500க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு கஞ்சி வழங்கப்பட்டது.

கைத்தறித் துணி விற்பனை

12—1—55 புதன்கிழமை மாலை 4 மணியிலிருந்து இரவு 12—45 வரை 37, 43-வது வட்ட தி. மு. கழகக் கிளைகளின் சார்பில் கழகத் தோழர்கள் இராயப் பேட்டை, மீர்சாகிப்பேட்டை தெருக்களில் கைத்தறித் துணிகளை விற்பனை செய்தனர். மொத்த விற்பனை ரூ. 660—13—0 ஆகும்.

*

பொதுச்செயலாளர் அண்ணா அவர்களின் அறிக்கைப்படி 9—1—55 ஞாயிறு அன்று 8 வது வட்டத்தில், இவ்வட்ட தி. மு. க. செயலாளர் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் முக்கிய வீதிகளில் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன. இதில் திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தினரும் மற்றும் பல தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வண்ணையம்பதி தமிழ்க் கலைக் கழகம்

சென்னை வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரியில் தமிழ்க் கலைக்கழக 4—ஆம் ஆண்டு நிறைவு விழாவும் பொங்கல் விழாவும் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் என். வி. நடராசன், கவிஞர் கண்ணதாசன், எஸ். ஆர். சுப்பிரமணியம், கணேசபாண்டியன் பி. ஏ., டபிள்யூ. யி. வேலாயுதம், வே. கபிலன் ஆகியோர் கலந்து கொள்ள விழா இனிது நடைபெற்றது.

ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேக வலுவையும், சுக்கில சுரோனித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினுல் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40—நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னாருடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினுலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை, சாப்பிடக்கூடிய லேகியம்
டப்பி 1-க்கு விலை ரூபா 3[illegible]
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன் 1[illegible]

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்
டப்பி 1-க்கு விலை ரூ. 6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன் 1—11—0

என். பி. செல்வம் & கோ
16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1

தாயகம் திரும்பிய பெரியார் அவர்கள் தந்த முதல் செய்தி

மலேயாவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு தாயகம் திரும்பிய பெரியார் அவர்கள் சென்னைக்கு வரும் வழியில் முதன் முதலாக நாகை துறைமுகத்தில் (16-1-55) கழகத் தோழர்களாலும் பொது மக்களாலும் வரவேற்கப்பட்டனர். அதுபோது பத்திரிகை நிருபர் ஒருவர் பெரியாரைக் கப்பலிலேயே பேட்டி கண்டு "ரங்கூனில் தாங்கள் தங்கியிருந்தபோது பாதுகாப்பும், தக்க உபசரிப்பும் செய்தவர்கள் தி. மு. கழகத்தினர் தான் என்று ரங்கூனிலிருந்த போது தாங்கள் பாராட்டிப்பேசியதாகச் செய்தி வந்ததே உண்மைதானா?" என்று கேட்டார்.

அதற்கு உடனே பெரியார் அவர்கள் தட்டுத் தடங்கலின்றி "ஆம் உண்மைதான். திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் எனக்குப் பாதுகாப்பும், தக்க உபசரிப்பும் அளித்தனர்; அது மட்டுமல்லாமல் மிக்க கண்ணியத்துடன் பெருமைப் படுத்தினர்"

என்று முதல் செய்தியாக இவ்வாறு கூறியிருக்கிறார் பெரியார் அவர்கள், பிறகு நாகையிலிருந்து சென்னை துறைமுகத்திற்குப் பயணப்பட்டார். 17-ந் தேதியன்று சென்னை வந்துச் சேர்ந்தார்கள்.

●

வீழ்ந்த மாவீரன்...தொடர்ச்சி

முடிசூட்டிக் கொண்டிருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமா? உடனே ஒரு குழப்பத்தை உண்டாக்கி யிருப்பார்கள். எனக்கும் இந்த நாட்டு மக்களிடையே ஒரு பிளவை உண்டாக்கியிருப்பார்கள்! சாஸ்திர சம்பிரதாயங்களை மீறுகிறான் சிவாஜி என்று பழி சுமத்தி யிருப்பார்கள்! 'சிவாஜி முடிசூட்டிக் கொள்வது தேவ நிந்தனை! மீறி செய்தால் கேடு பல நிகழும்! நாடு சுடுகாடாகும்! கடவுள் சாபமிடுவார்! மராட்டியம் கவிழ்ந்துவிடும்! பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடும்!" என்றெல்லாம் சூதானவார்த்தைகளை அள்ளி அள்ளி வீசுவார்கள்! அவர்கள் வஞ்சகத்தில் சிக்கிய மக்களும் உண்மை என்பார்கள். மத விரோதச் செயல் புரிந்தான் சிவாஜி என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டுவிடும். கடைசியில் மக்களே ஆத்திரங் கொண்டு என் மீது பாய்ந்தாலும் பாயலாம்! இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை மராட்டியத்தில் உருவாக்கிவிடுவார்கள் நான் மீறி முடிசூடி யிருந்தால்! அப்போது என் வீரம் வீழ்ந்துபடும்! வஞ்சகத்தை வஞ்சகத்தால்தான் வீழ்த்த வேண்டும். இப்போது புரிகிறதா வஞ்சகத்தின் முன் வீரம் நிற்காது என்று!"

"ஆம்; உண்மைதான். வஞ்சகத்தின் முன் வீரம் நிற்கமுடியாதுதான்! சரி! பிறகு ...."

"பிறகென்ன? கூடாது என்று கூறியவர்களை அழைத்தேன். ஏதுமறியா ஏமாளி போல வந்தார்கள்! முடிசூட்டிக் கொள்ள வேண்டுமென்றேன். நீங்களா......என்று இழுத்தார்கள்! 'ஆம்; நான்தான். ஆனால் சாஸ்திரத்தை மீறக்கூடாது' என்றேன். எப்படி என்று கேட்டார்கள். 'வழியிருக்கிறது. நீங்கள் என்னை வேத முறைப்படி க்ஷத்திரியனாக மாற்றிவிட வேண்டும்' என்றேன்! சரி என்று ஒப்புக்கொண்டாலுங்கூட 'ஆனால்' என்ற வார்த்தையைப் போட்டார்கள்! வேறொன்றுமில்லை, காசிமா நகரிலுள்ள கங்குபட்டர் என்ற குருதேவர் வந்தால்தான் முடியும் என்றார்கள்! அவ்வளவு தான்......"

"யாரது? கங்கு பட்டரா?;'

"ஆம்; கங்குபட்டர்தான்! விதைக்காமல் அறுக்காமல் ஆனால் அறுசுவையோடு உண்ணும் சோம்பேறிக் கூட்டத்தின் தலைவர்! பார்ப்பனீயத்தின் ஏகக்குரல்! வர்ணாஸ்ரமத்தின் பிம்பம்! உதட்டிலே புன்னகையும், உள்ளத்திலே நச்சு எண்ணங்களையும் கொண்ட உருவம்! கபட எண்ணங்களும், வஞ்சக நினைவுகளும்சேர்ந்த கூட்டுச்சரக்கு! ஆம்; அவரைத்தான் அழைத்தேன் —க்ஷத்திரியனாக மாற்ற! ஏராளமான நிதியைப் பெற்றுக் கொண்டு வந்தார் காசிபுரத் [illegible]பாடி கங்குபட்டர்! நான் வணங்கி [illegible] முழந்தாளிட்டு மண்டியிட்டேன்! [illegible]ளிந்தேன்! ஆம்; கங்குபட்டருக்குத் [illegible]லை! இல்லை! பார்ப்பனீயத்துக்கு! ஆனால் [illegible]போது என் இதயத்தில் இரத்தம் கசிந்தது! உள்ளம் பேரிரைச்சலோடு அழுதது!........"

"உண்மையாகவா?"

"ஆம்; உண்மையாகத்தான். நான்கு மாத காலம் நல்ல முறையில் உணவளித்தேன்! லட்சம் லட்சமாகக் கொட்டிக் கொடுத்தேன்! தங்கம், வெள்ளி இன்னோரன்ன பொருள்களை எடைக்குஎடை நிறுத்துக் கொடுத்தேன்! கேட்டதெல்லம் கொடுத்தேன்! யாருக்கு? பாடுபட்டு பயிர் செய்த பாட்டாளிக்கா? மண்ணைத் தோண்டி பொன்னெடுத்த உழைப்பாளிக்கா? இல்லாத ஏழைக்கா? அல்லது நாட்டு மக்களின் நன்மைக்கா? இல்லை! இல்லவேயில்லை! உழைக்காமல் வாழும் அந்த ஊதாரிக் கூட்டத்துக்குத்தான் கொடுத்தேன்! மராட்டியர்களின் உழைப்பை வாரி வாரி இறைத்தேன்! ஆனால் உள்ளம்வெதும்பினேன்—வேதனைப் பட்டேன்—கண்ணீர் விட்டேன்—கலங்கினேன்—ஆனால் கொஞ்ச காலத்துக்கு! பிறகு மனதை தேற்றிக் கொண்டேன்! உள்ளத்தை உறுதி செய்து கொண்டேன்! அதன் பிறகு பார்ப்பனர்களை பராமரித்தேன்! பார்ப்பனீயத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டேன்! வர்ணாஸ்ரமத்தை வளர்த்தேன்! ஏன் தெரியுமா? அது அழிய வேண்டுமென்பதற்காக!......"

'என்ன! அழிவதற்காகவா? விசித்திரமான சொற்களை வியப்பில்லாது கூறுகிறீர்!'

'ஆம்; பார்ப்பனீயம் அழிய வேண்டும்! இதுவே என் ஆசை. ஆனாலும் அதை வளர்த்தேன்! வியப்பாக மட்டுமல்ல விபரீதமாகவும் இருக்கும்! விளக்கமாகக் கூறுகிறேன். பார்ப்பனீயத்தின் வளர்ச்சிக்கு என்னென்ன தேவையோ அத்தனையும் செய்தேன்—இந்நாட்டு மக்களை வாட்டி வதைக்கட்டுமென்று! ஆம். உண்மைதான், ஆனால் கொஞ்ச காலத்துக்குத்தான் அவர்கள் ஆதிக்கம் நடைபெறும் என்று தெரியும்! அதற்குப் பிறகு, பார்ப்பனீயம் வளர வளர, அதன் கொடுமை அதிகமாக அதிகமாக நாட்டில் ஒரு விழிப்பு ஏற்படும்! அவர்கள் ஆதிக்கம் மக்களை நசுக்க நசுக்க நாட்டில் அறிவுதயம் கிளம்பும்! அந்த அறிவுச் சுடரில் பார்ப்பனீயம் பொசுங்கிப் போகும்! ஆரியமாயை அழிந்து போகும்! இந்நாட்டு மக்களின் கரங்களிலே பூட்டப்பட்டிருந்த சாதி, சமய, சாத்திரங்கள் என்ற விலங்குகள் தெறித்துவிழும்! மதம், மூடநம்பிக்கை —இவை மக்களைவிட்டு விலகிப்போகும்! அந்த சூதுக் கூட்டத்தின் சூழ்ச்சி சுக்கல் சுக்கலாக உடைக்கப்படும்! அந்த வஞ்சகச் சிலந்தியின் முகமூடி கிழித்தெறியப்படும்; இந்த அழிக்கமுடியாத என் நம்பிக்கை காரணமாகத்தான் பார்ப்பனீயத்தை வளர்த்தேன்! வளரும் பார்ப்பனீயத்தின் கொடுமை வளர வளரத்தான் நாட்டில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட முடியும் என்று நான் நம்பினேன்! இப்போது நீ கூறு, பார்ப்பனீயம் இந்நாட்டு மக்கள் வாழ்க்கையிலிருந்து அகற்றப்பட வேண்டுமா. வேண்டாமா என்று!......"

"ஆம்; சிவாஜி! அகற்றப்படத்தான் வேண்டும்! மனிதன் மனிதனாக வாழ ஆரிய மாயை அகலத்தான் வேண்டும்! இதோ. அந்த விழிப்பு விடிவெள்ளி முளைத்து விட்டது' அறிவுதயம் ஆரம்பமாகி விட்டது! இனி ஆரிய மாயை அகலத்தான் வேண்டும் —அகலத்தான் போகிறது!........................

விழித்துக் கொண்டேன். ஒட்டியிருந்த கண் இமைகள் விட்டுப் பிரிந்தன! கண்களை கசக்கிவிட்டுப் பார்த்தேன். சிவாஜியைக் காணோம். ஜன்னல் வழியாக புகுந்து வந்த காற்றில் படபடத்தன மேஜைமீதிருந்த தாள்கள். ஆம்; நான் கண்டது கனவுதான் ஆனால் அந்தக் கனவு தந்த உண்மை...

...ஆரியக் கூட்டமிருக்கிறதே, அது பார்ப்பதற்கு சாதுவாகத்தானிருக்கும். ஆனால் மிகவும் பயங்கரமானது...அதன் வஞ்சகம் ஒரு மாயவலை! அதில் சிக்கியவர் மீளமுடியாது......வஞ்சகத்தின் முன் வீரம் நிற்காது...வஞ்சகத்தை வஞ்சகத்தால்தான் வீழ்த்த வேண்டும்...வளரும் பார்ப்பனீயத்தின் கொடுமை வளர வளரத்தான் நாட்டில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட முடியும்...

கனவில் பேசிய சிவாஜியின் இச் சொற்கள் என் உள்ளத்தில் விடாது எதிரொலித்துக் கொண்டிருந்தன! அப்படியே அந்த வார்த்தைகள் என் உள்ளத்தில் பதிந்து போய்விட்டன — இருதயத்தோடு கலந்து விட்டன.

எண்ணங்களை பட்டுப் பூச்சிகளாக்கி பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் போது. எனக்கு திடீரென்று ஒரு சந்தேகம் கிளம்பியது.

"......சிவாஜி ஒரு மாவீரன்தான்!— ஆனாலும் வீழ்ந்து பட்டான்! பாராண்டவன் தான்—ஆனாலும் பார்ப்பனீயப் பலிபீடத்தில் சிக்கிச் சிதைந்து விட்டான்! சிவாஜி சிங்கம்தான்—ஆனாலும் சிறுநரி முன் மண்டியிட்டான்! சிவாஜி சத்ராதிபதிதான் —ஆனாலும் அவன் சாம்ராஜ்யம் சரிந்து விட்டது!.........இதெல்லாம் உண்மையா? இப்படியும் நடந்திருக்குமா? அல்லது கற்பனையா? வரலாற்றில் இப்படிப்பட்ட விசித்திரமான வேதனை —யைத் தரக்கூடிய நிகழ்ச்சிகளும் உண்டா?........"

இப்படி சந்தேகங்கள் பல என் மனதைக் கவ்விப்பிடித்த நேரத்தில்தான்........ யாரோ என்னருகில் சிரிப்பது கேட்டது.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தேன். எவரையும் காணோம்! மீண்டும் அந்தச் சிரிப்பு! கூர்ந்து பார்த்தேன்......சற்று முன்னர்தான் படிக்கலாம் என்று எண்ணி நண்பன் ஒருவனிடமிருந்து வாங்கி வந்த —ஜது நாத் சர்க்கார் எழுதிய "சிவாஜி" என்ற புத்தகம்தான் சிரித்தது!

"ஆமாம்! வெறும் கற்பனையல்ல—வரலாற்று உண்மைதான்!" என்று கூறிவிட்டு மறுபடியும் சிரித்தது அலமாரியிலிருந்து அந்தப் புத்தகம்!

●

தரணி போற்றிடும் திராவிடர் திருநாள்

விழா கொண்டாடினர் — விருதுகள் பெற்றனர்.

சென்னையில் திராவிடர் திருநாள் 14—1—55 வெள்ளியன்று, எழும்பூர் அழகிரி திடலில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. எல்லா ஆண்டுகளையும்விட இவ்வாண்டு மிகச் சிறப்பாக விளையாட்டுப் பந்தயங்கள், நாடகப் போட்டி முதலியவைகளுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு பொங்கல் விழாவைக் கொண்டாடினர்.

தி. மு. கழக பேச்சாளர்களின் கயிறு இழுப்புப் போட்டி திராவிடர் திருநாள் விழாவுக்கே சிகரம் அமைத்தது.

பகல் 2-மணியிலிருந்தே ஏராளமான மக்கள் விளையாட்டுப் போட்டிகள் நடக்குமிடமாகிய சேத்துப்பட்டு எம். சி டி. திடலை அடைந்த வண்ணமிருந்தனர். சுமார் 3-மணிக்கு விளையாட்டு போட்டிகள் ஆரம்பமாயின. முதலில் கோணி கட்டிக் கொண்டு ஓடும் போட்டி நடைபெற்றது. அடுத்து அரை மைல் ஓட்டப் பந்தயம், ஒரு மைல் ஓட்டப் பந்தயம், சைக்கிள் விரைவாக ஓட்டுதல், சைகிள் மெதுவாக ஓட்டுதல், இரும்புக்குண்டு எறிதல் முதலியவை நடந்தேறின. அடுத்து மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த கயிறு இழுப்புச் சண்டை நடந்தேறியது. தி. மு. க. பேச்சாளர்கள் ஒருபுறமும், நடிகர்கள் ஒரு புறமும் நின்று கயிறு இழுத்தனர். பேச்சாளர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையிலும், நடிகர்கள், நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள் தலைமையிலும் கயிறு இழுத்தனர். அண்ணா அவர்கள் நடுவணராக இருந்து கயிறு இழுப்புப் போட்டியை நடத்தி வைத்தார். இறுதியில் நடிகர்கள் கயிறை இழுத்து வெற்றி பெற்றனர். நடிகர்கள் குழுவில் டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராசேந்திரன், இசைமுரசு அனிபா போன்றோர்களும், பேச்சாளர்கள்குழுவில், இரா.நெடுஞ்செழியன் அ. பொன்னம்பலனார், என். வி. நடராசன், எ. கோவிந்தசாமி எம். எல். எ., முகவை ஆர். எஸ். பாண்டியன். வி. எஸ். கோவிந்தராசன், சி. ஆர். பாலசுந்தரம் ஆகியோரும் இருந்தனர்.

விளையாட்டுப் போட்டிகளை தோழர்கள் காஞ்சி மணிமொழியார், ஏ. ஆர். சேஷாசலம், சி. ஆர். பாலசுந்தரம், பஞ்சாட்சரம், மோகன், ஜெயராமன் ஆகியோர் உடன் இருந்து நடத்தினர்.

விளையாட்டுப் போட்டி நடந்தேறியதும் அனைவரும் விழாத்திடலான அழகிரி திடலுக்கு கலைந்து சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. விழாவில் சுமார் லட்சத்திற்குமேற்பட்ட மக்கள் குழுமி யிருந்தனர். விழா அரங்கில் இசைக் குயில் பி. எஸ். செல்வா அவர்கள் தமது குழுவினருடன் இன்னிசை வழங்கினர். அடுத்து இசைமுரசு அனிபா அவர்கள் தமது குழுவுடன் இசை விருந்தளித்தார்.

இதற்கிடையில் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் சித்திர போட்டியும், அழகுப் போட்டியும் நடந்தேறியது.

இதற்கடுத்து கிளைக் கழகங்களின் நாடகப் போட்டி நடந்தேறியது. இடையிடையே சிறிது மழை பெய்து கொண்டிருந்த போதிலும் அனைவரும் உற்சாகமாக விழாவில் கலந்துகொண்டனர்.

நாடகப்போட்டியில் கலந்து கொண்ட கிளைக் கழகங்களும், நடைபெற்ற நாடகங்களும்:

1. 10 வது வட்ட தி. மு. க. "குடும்பத்திலே ஒரு நாள்"

2. 11 வது வட்ட தி. மு. க. "எப்படி மாறி விட்டார்!"

3. மவுண்ட்ரோடு தி.மு.க. "கேள்விக்குறி!"

4. 50 வது வட்ட தி.மு.க. "சரியா தப்பா!"

5. 1 வது வட்ட தி. மு. க. "பக்தி"

6. 6 வது வட்ட தி.மு.க. "ரத்தக்கண்ணீர்"

7. 18 வது வட்ட தி. மு. க. "பலிபீடம்"

நடைபெற்ற ஓரங்க நாடகங்களில் சிறந்த நாடகமாக 10-வது வட்ட கழக சார்பில் சிறுவர் சிறுமிகளால் நடத்தப்பட்ட "குடும்பத்திலே ஒரு நாள்" என்னும் நாடகம் தேர்ந்தெடுக்கப் பட்டது. இதில் நடித்த சிறுவர் சிறுமிகள் கூடியிருந்த மக்களைக் குலுங்க குலுங்கச் சிரிக்கவைத்தனர்.

சிறந்த நடிகருக்கென இருந்த பரிசு 6-வது வட்டத்தைச் சேர்ந்த தோழர் கேசவன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. தோழர் கேசவன் அவர்கள் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் நடிக்கும் ரத்தக் கண்ணீர் நாடகத்தை, தான் ஒருவரே, அனைவரும் பாராட்டத்தக்க முறையில் நடித்துக் காட்டினர். அவரே எல்லா பாத்திரங்களையும் ஏற்று நடித்தார்.

இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

இந்த ஆண்டு திராவிடர் திருநாளை வெகு சிறப்பாக நடத்தியமைக்கு, சென்னை மாவட்ட செயலாளருக்கும், மாவட்டத்திற்கும், ஒத்துழைப்புத் தந்த கிளைக் கழகத் தோழர்களுக்கும் மகிழ்ச்சியைத் தெரிவித்துப் பாராட்டினர். மாவட்ட செயலாளர் கண்ணபிரான் அவர்கள் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

பரிசு பெற்றோர் பட்டியல்

கோணிப்பந்தயம்: முதற்பரிசு, எல். முருகேசன், இரண்டாம் பரிசு: முத்து

அரைமைல் ஓட்டம்: முதற்பரிசு: கே. பெலிக்ஸ் இரண்டாம் பரிசு; ஜே. சி, ஜேம்ஸ்

ஒருமைல் ஓட்டம்: முதற்பரிசு: ஜே. பி. ஆளவந்தார். இரண்டாம்பரிசு ஜே. பி. ஜேம்ஸ்

சைக்கிள் விரைவாக ஓட்டுதல்: முதற்பரிசு: கனகசபை, இரண்டாம் பரிசு: முத்து

சைக்கிள் மெதுவாக ஓட்டுதல்: முதற் பரிசு: டி. வெங்கடேசன், இரண்டாம் பரிசு: ஹயாத் பாட்சா.

இரும்புக்குண்டு எறிதல்: முதற் பரிசு திருநாவுக்கரசு, இரண்டாம் பரிசு: பொன்முடி.

கயிறு இழுப்புப் போட்டி: நடிகமணி நாராயணசாமி குழுவினர்.

ஓரங்க நாடகப் போட்டி: "குடும்பத்திலே ஒரு நாள்" (10 வட்டம்) கதைவசனம்: கே. எம். கண்ணபிரான்.

சிறந்த நடிகர்: கேசவன், 6 வது வட்டம்.

சித்திரப்போட்டி: இந்திராணி.

அழகுப்போட்டி: முத்துமாணிக்கம்.

●

கைத்தறித் துணி விற்பனை

●

சென்னை

9—1—55 காலை 11 மணிக்கு சென்னை 9-வது வட்டம் (எழுகிணறு) கழகப் பணிமனையிலிருந்து தோழர் வி, முனுசாமி தலைமையில் மேளவாத்தியங்களோடு கழகத் தோழர்கள் ஊர்வலமாகத் தெருக்கள்தோறும் சென்று ரூ. 500க்கு மேல் கைத்தறித் துணி விற்பனை செய்திருக்கின்றனர்.

*

29, 30, 31-வது வட்ட தி. மு. கழக கிளைகளின் சார்பில், 9—1—55 காலை 9-மணி முதல் பகல் 1-30 வரை முக்கிய வீதிகள்தோறும் கழகத் தோழர்கள் கைத்தறித் துணி விற்பனை செய்தனர். மொத்த வசூல் ரூபாய் 379—15—0 என்று அறிவிக்கப்படுகிறது.

மேலவாழுக்கரை

8—1—55 முதல் 13—1—55 வரை நாகை தாலுகா மேலவாழுக்கரை தி. மு. கழகத் தோழர்கள் ரூ 461—3—10 க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்

திருவாரூர்

8, 9-1-55 நாட்களில் தி. மு. கழகத் தோழர்கள் ஒலிபெருக்கியுடன் வீதிகள்தோறும் சென்று கைத்தறி துணிகளை விற்பனை செய்தனர்; விற்பனை மொத்தம் ரூ 815—12—6

கோபி

9—1—55 கோபி நகர வீதிகளில் தி. மு. கழகத் தோழர்களால் 'கைத்தறித் தினம்' கொண்டாடப் பட்டது. தோழர்களனைவரும் தெருத்தெருவாகச் சென்று சுமார் ரூ. 400-க்கு கைத்தறி துணி விற்பனை செய்தனர்.

சிக்கல்

9—1—55-ல் இவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள் கூட்டுறவு கைத்தறித் துணிகள் வாங்கி அவற்றை தெருத் தெருவாகச் சென்று ரூ. 211—10—9 விற்பனை செய்தார்கள்,

சூலூர்

9—1—55 பகல் 12-மணிக்கு இவ்வூர் தாளமுத்து நடராசன் படிப்பகச் சார்பில் கைத்தறியாளர் வாரம் கொண்டாடப்பட்டது தோழர் எஸ். எ. முத்து தலைமையில் கைத்தறித் துணிகளுடன் ஊர்வலமாகச் சென்று ரூபா 223—4—6-க்கு துணி விற்பனை செய்தனர்.

குடந்தை

குடந்தை நகர தி. மு. க. கிளையின் ஆதரவில் கைத்தறித்துணி விற்பனை நடைபெற்றது: மாவட்ட செயலாளர் தோழர் கே கே நீலமேகம் விற்பனையைத் துவக்கி வைத்தார். சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

வலங்கைமான்

13—1—55ல், தி. மு. கழகத் தோ[illegible] தறித், துணியை விற்பனை செய்த[illegible] விற்பனையான தொகை ரூபாய் 271[illegible]

கோவை

6-1-55 முதல் 13-1-55 வரை [illegible] மண்டபத்தில், கோவை நகர தி. மு கழகத் தோழர்கள் ரூ: 8,000-க்கு கைத்தறித் துணி விற்பனை செய்தனர்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழு அச்சகம் 16, பிக்லயன்ஸ் ரைஸ் மில் தெருவு, சென்னை-1.